
www.tamilarangam.net

# சிந்தனை

ஐப்பசி

1993



Picasso.

**உள்ளே**


- மலையகம் மீட்சி பெற.
- ராஜனியிலிருந்து.........
- துரிப்புக் குறிப்புக்கள்
- ஜேசூரின் முதிசம்
- நாளை ஒரு புதுவிடியல்


P, RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE FRANCE

SINTHANAI
OCT. 1993

3/93

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனை



ஆரம்பம் 1985

சுதந்திரமான கருத்துப்பரிமாறல்கள்
மூலமே சிந்தனை உருவாகின்றது.

**3/93**

**15/10/1993**

ஆறு இதழ்களுக்கான சந்தா
30 டி.எம்.

சகல தொடர்புகளுக்கும்:

**SINTHANAI**
**HAUSSMANNSTR.107**
**70188 STUTTGART**
**GERMANY**

# இனப்பிரச்சனை

(பிரச்சனைகளை பிரச்சனைகளாகவே வைத்திருக்க விரும்புபவர்களுக்கு)

எனது விழியில்
வழியும் முத்துக்களை
கோர்த்தொரு மாலையாய்
உனக்கு அணிவிப்பேன்.
உனக்கிப்போ திருப்தியா?
துருப்பிடித்த இரும்புச் சிறைக் கம்பிகளின் மீது
என் கரங்களின மோதல்கள்
உனக்கானவென் பரிசாகட்டும்
உனக்கிப்போ திருப்தியா?

ஒரு கணம்
எனது வேறுபடுத்தப் பட்ட நிலைதன்னை
மறந்து விடுகின்றேன்.
எனது அதிருப்திப் பறையொலிகளை
மௌனமாக்கி விட்டு
நட்சத்திரங்களுக்குக் கொஞ்சம்
செவி சாய்க்க விளைகின்றேன்.

நீ, உனது தருணங்களுக்காய்க் காத்திரு.
ஒரு கலவரத்தின் முழக்கத்திற்கு, அதன்
ஒரு மழைத் துளிக்காய்க் காத்துக் கிடக்கிறாய்
உனது பலவீனத்தின் பசிக்கு
நான் தீனியாகவும் மாட்டேன்.
உன்னைத் திருப்திப் படுத்தவும் மாட்டேன்

உனது பசிக்கு எனது இரத்தமோ
உனது நிர்வாணத்திற்கு ஆபரணமாக
எனது இடுக்கண்களோ
எப்போதுமே கிடைக்காது.
நீ உனது தருணங்களுக்காய் காத்திரு.

"கறுப்புக் கவிஞர்கள் என்ற கவிதைத் தொகுதியிலிருந்து நாயோமி மாட்கெட்டின் கவிதை. தமிழில் காளிதாஸ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மலையகம் மீட்சி பெற......

*சிவனொளி பாத மலையும் நடுங்கி*
*இந்து சமுத்திரக் சுழிகளில் புதுங்க*
*ஒரு நாள் இங்கு மானிடம் விழிக்கும்*
*எல்லோர் கைகளின் விலங்கும் தகரும்*
*பறவைகள் போலவும் பூக்களைப் போலவும்*
*எல்லோர் இருப்பும் சுதந்திரம் எய்தும்.*

*வ.ஐ.ச.ஜெயபாலன்

மலையக மக்களின் துயரங்கள் முடிவில்லாத ஒரு தொடர் கதையாகவே உள்ளன. அவர்களின் தனிப் பெரும் தலைவர் எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் தொண்டமானும் அவரின் தொழிலாளர் காங்கிரசும் அரசாங்கத்தில் பல காலம் ஒட்டிக் கொண்டிருப்பதுடன், அவர்களில் பெரும் பகுதியினர் தேர்தல் காலங்களில் தமது வாக்குகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அளித்திருந்தும் அவர்களுடைய உரிமைகள் நாளடைவில் பறி போய்க் கொண்டே இருக்கின்றன!

அவர்களின் வாழ்க்கை முறைகளில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படுவதாகவில்லை. வாக்குரிமையற்றவர்கள் வாக்குரிமை பெற்று விட்டார்கள் என்று தம்பட்டம் அடிக்கப்பட்ட போதும், அந்த வாக்குரிமை அவர்களை மேலும் கண்களைக் கட்டி காட்டுக்குள் இட்டுச் செல்லத்தான் உதவியுள்ளது. அவர்கள் நம்பி வாக்களித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் அவர்களுக்கு நல்வாழ்வு தருவதற்குப் பதிலாக அவர்களுக்கு குழி தோண்டவே முயலுகின்றன! தினம் தினம் செய்யப்படும் சட்டங்களும் புதிய விதிமுறைகளும் அவர்களை தொழிலற்றவர்களாகவும் வறுமைக் கோட்டில் வாழும் ஆண்டிகளாக்கவுமே முயலுகின்றன. தாம் ஆதரித்த அரசியல் வாதிகளிடமிருந்து இவர்கள் பெற்றுக் கொண்டது எதுவுமில்லை. சில தலைவர்களுக்கு சில மந்திரிப் பதவிகள். ஆனால் ஓட்டுக் கொடுத்த மக்களுக்குக் கிடைத்தது வெறும் ஓடுதான்.



தொண்டமானின் பூரண ஆதரவுடன் கொண்டு வரப்பட்ட "தோட்டங்களைத் தனியார் கம்பனிகளிடம் கொடுக்கும் திட்டம்" இன்று தோட்டத் தொழிலாளர்களின் சாபக்கேடாக மாறியுள்ளது. நட்டத்தில் இயங்கும் அரச தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டால் அவை இலாபத்தில் இயங்கும். அந்த இலாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு கிடைக்கும், குடியிருக்கும் வீடுகள் சொந்தமாகிவிடும் என்றெல்லாம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினர் வாய்ப்பந்தல் போட்டனர். ஆனால் தனியார் கம்பனிகளின் கைகளில் தோட்டங்கள் மாறிய பின்பு நடந்தவை வேறு.

இந்த மாற்றத்தினால் தொழிலாளர்கள் பெற்ற பரிசுகள்: தோட்டங்களில் ஆட்குறைப்பு, வேலை நாட்கள் குறைப்பு....... ஏற்கனவே சீரழிந்த நிலையிலிருந்த 'லயன்கள்' முற்றாகப் பழுது பார்க்காமல் விடப் பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபத்தில்.....நடத்துவதற்காக 55 வயதடைந்தவர்கள் ஓய்வுபெறநிர்பந்திக்கப்பட்டார்கள். மாதத்திற்கு 25 நாட்கள்அல்லதுவருடத்திறகு 300 நாட்கள் வேலை என்பது கைவிடப் பட்டு வேலை நாட்கள் குறைக்கப்பட்டதால் தொழிலாளர்கள் போதிய வருமானம் இல்லாமல் வாழக்கைச் செலவைத் தாங்க முடியாமல் திண்டாட வேண்டியுள்ளது. அரசாங்கம் மற்றைய தொழிலாளர்கனுக்குக் கொடுத்த சம்பள உயர்வுகளைக் கூட பல கம்மபனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்க மறுத்து விட்டன. நீவுட் தோட்டத் தொழிலாளர்களின் பல மாதங்களாக தொடரும் வேலைநிறுத்தம் இதன் விளைவுதான். தொழிலாளர்கள் முன்பு பெற்று வந்த சலுகைகள் மறுக்கப்பட்டதுடன் புதிய விதி முறைகள் அவர்களுக்கெதிராக அமுல் நடத்தப்பட்டன. முன்பு சம்பளத்துடன் பெற்ற லீவு நாட்கள் மறுக்கப்பட்டன. சென் கிளயர் தோட்டத்தில் பெண்கள் செங்குத்தான மலைகளில் கூடைகளைச் சுமந்து கொண்டே கொழுந்து பறிக்க வேண்டுமென்ற புதிய விதி முறைக்கு எதிராக அவர்கள் போராட வேண்டியேற்பட்டது.
தொழிற்சங்கங்களுக்கும் நிர்வாகங்களுக்கிடையிலான உறவுகள் மோசமான நிலைமைகளை அடைந்துள்ளன. இதன் விளைவாக இன்று தோட்டங்களில் வேலை நிறுத்தங்கள் மூலம் தொழிலாளர்கள் தமது எதிர்ப்புகளைக் காட்ட ஆரம்பித்துள்ளனர்.

இந்த மக்களின் இந்த எதிர்ப்பபுகள் அரசியல் வடிவம் எடுத்து விடக் கூடாதென்பதில் அரசாங்கமும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் மிகவும் கவனமாகச் செயல் படுகின்றனர். மாகாணசபைத் தேர்தலில் மலையக மகக்களின் ஆதரவைத் தொண்டமான் மூலம் பெற்ற அரசாங்கக் கடசியே அந்த மக்களின் சக்தியில் பொறாமை கொண்டு அடுத்த தேர்தலில் வாக்களிப்பதற்கு மலையக மக்கள் அடையாள அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டுமென தீர்மானித்துள்ளது. தோட்டங்களில் வேலையற்ற நிலமைகளை உருவாக்கி தொழிலாளர்களை வேலைவாய்ப்புத் தேடி வேறு பிரதேசங்களில் குடியேற வைப்பதன் மூலம் மலையகத்தில் அவர்களின் சக்தியை குறைக்கும் சதிகளும் நடைபெறுகின்றன. இவற்றை இனம் கண்டு எதிர்க்கும் சக்திகள் மீது அரச ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் மற்றும் தலைவர்கள் மீது இவ்வாறு அரச ஒடுக்கு முறை பாவிக்கப் பட்டுள்ளது. மக்களின் ஆதரவுடன் சிறையிலிருந்தவாறே வெற்றி பெற்ற சந்திரசேகரனை சத்தியப் பிரமாணமெடுக்கக் கூட அனுமதிக்காத அரசாங்கத்தின் ஈனச் செயலை தொண்டமானின் ஜனநாயகம் மௌனமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

மலைக மக்களின் மறுமலர்ச்சிப் பாதையானது காலகாலமாக அவர்கள் மூழ்கியிருக்கும் அறியாமைகளிலிருந்து விடுபட்டு இன்றைய தொண்டமான் தலைமைகளை தூக்கி எறிவதிலும் தமது நலன்களுக்குத் துரோகமிளைக்காத புதிய தலைமைகளை உருவாக்குவதிலுமே தங்கியிருக்கின்றது. இந்தக் குறி கோளுடன் மலையகத்திலுள்ள சகல முற்போக்கு சக்திகளும் ஐக்கியப்படுவதும் அவசியமாகும்.

## புதிதாய் சிந்தியுங்கள்

*இலைகளில்*
*இலக்கியம் படைத்துச்*
*சருகாகிப் போனது*
*போதும்*
*இனியாவது*
*செடிக்குள்ளிருந்து*
*தலை நீட்டி*
*உலகைப் பாருங்கள்*
*உங்களைத் தவிர*
*எல்லாமே*
*நவீனமாகிவிட்டன*
*நீஙகள் மாத்திரம்*
*இன்னும் ஏன்*
*பழசுகளாய்.......?*
*புதிதாய் சிந்தியுங்கள்*
*வரலாற்றை மாற்றுங்கள்!*
*ஐயா!*
*பாதைகள்*
*உருவாவதில்லை*
*உருவாக்கப்படுகின்றன!!*

❄ சின்ன பாரதி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆனையிறவில் இருந்து புறப்பட்ட ''யாழ்தேவி'' கிளாலி சென்று மீண்டு விட்டதாம்! இந்தப் பிரயாணத்தில் இந்த உலகை விட்டுச் சென்றவர்கள் தொகை 300 க்கும் அதிகம்!!**

# யாழ் தேவி....

❄ தேவன்

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அண்மைக்கால அர்த்தமற்ற இராணுவ நடவடிக்கைகளில மிகவும் உக்கிரமானதும் அழிவுகள் அதிமானதுமான நடவடிக்கை இதுவெனக்க கூறப்படுகின்றது. "இலங்கையில் இனப்பிரச்சனை இல்லை, இன்று இருப்பது வடக்கு கிழக்கிலுள்ள பயங்கர வாதப்பிரச்சனைதான்" என்ற புதிய ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தின் பின்பு எடுக்கப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையும் இதுவாகும். புதிய ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்கா இந்தக் கூற்றின் மூலம் எமது நாட்டின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எதையும் செய்யப் போவதில்லை என்பதையும், மற்றவர்களைப் போல் அதை மேலும் சிக்கலாக்குவார் என்பதும் தெளிவாகியுள்ளது. இவரின் பதவியேற்பின் பின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலும் காட்டிலும் இராணுவத் தீர்வு காண்பதிலேயே அதிக நாட்டம் காட்டப்படுகின்றது. அரச படைகளை ஒரு இலட்சமாக அதிகரிக்கவும், ஒலியிலும் பார்க்க வேகமாகச் செல்லும் குண்டு வீசும் விமானங்களையும், பீரங்கிப்படகுகளையும், கவச வாகனங்களையும் கொள்வனவு செய்வதில் ஊக்கம் காட்டப்பட்டது. இந்த யுத்த தளபாடங்கள் யாவும் பயங்கரவாதிகளுக்கெதிரான போர் என்ற போர்வையில் பொது மக்கள் மீது பாவிக்கப்படுகின்றன. நாள் தவறாமல் பொது மக்கள் மீது குண்டு பொழியும் நடவடிக்கைகள் தொடருகின்றன. செல்லச்சன்னிதி உற்சவத்தின் போதும், துர்க்கை அம்மன் கோவில் உற்சவத்தின் போதும், கலை விழா, பொதுக் கூட்டம் ஆகியவை நடந்து கொண்டிருந்த போதும், பொது மககள் மீது விமானங்கள் குண்டுகளைப் பொழிந்துள்ளன. இதனால் இறந்த பொது மக்களைப் புலிகள் இறந்தனர் எனக் கணக்குக் காட்டவும் அரசாங்கம் தவறவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மற்றைய பிரதேசங்களுக்குச் செல்வதற்கு மக்கள் இன்று பாவிக்கும் பாதை கிளாலிக் கடலேரி என்பது உலகறிந்த விடயம். இந்தக் கடலேரியை பொது மக்கள் கடக்கும் வேளையில் ஷெல் தாக்குதல், குண்டுத்தாக்குதல் ஆகியவை தொடர்ச்சியாகவும் மேற் கொள்ளப்படுவதும், வடபகுதி மக்களுக்கு அத்தியாவசிமாகத் தேவைப்படும் பொருட்கள் மீது தடைகளை விதித்து மக்களைப் பட்டினியால் வாட்டுவதும் இந்த அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை என்பதிலும் பார்க்க இனவொழிப்பு நடவடிக்கைகள் என்றே கூற முடியும். வடக்கில் பட்டினியையும் நோயையும் வளரவிட்டு, பொதுமக்களை விமானங்கள் எப்போது குண்டு போடும் என்ற பயங்கர நிலையில் வைத்திருக்கும் அதே வேளையில் தெற்கே குடிபெயர்ந்த ஒவ்வொரு தமிழனும் இன்று பயங்கரவாதியாகக் கருதப்படுகின்றான். தென் பகுதியில் இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி – அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால் – கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்படுகின்றனர். அகதி முகாங்களில் வாடும் மக்களைக்கூட பயங்கரவாதிகள் என கொழும்பில் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு வந்த மக்கள் விரட்டியடிக்குமளவிற்கு இனவாதம் வளர்ந்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் வட கிழக்குப் பிரதேசங்களில் நிலமைகள் "எல்லாம் நல்லாக இருக்கின்றன" என்று அரசாங்கத்திற்கு ஆலவட்டம் பிடிக்கும் இயக்கங்கள், தம்பட்டம் அடிக்க முயற்சித்தாலும், இந்தப் பிரதேசங்களில் நிலமைகள் நேர்மாறாகவே இருக்கின்றன. தீவுப்பகுதிகளிலும், மட்டகளப்புப் பிரதேசத்திலும் கேட்பாரற்ற இராணுவ சர்வதிகாரமே நடைபெறுகின்றது.

இலங்கையில் இனப் பிரச்சனையில்லை என்று ஒரு புறத்தில் கூறியபடி மறுபுறத்தில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தெரிவுக் குழுவின் அறிக்கையையும் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. தெரிவுக்குழுவை சகல தமிழ் குழுக்களும் பகிஷ்கரித்து வெளியேறிய பின்பு,

( 12ம் பக்கம் பார்க்க )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பத்தாண்டுகளின் படிப்பினைகள்

* ராஜன்

*1983–1993.* பத்தாண்டுகள் ஒரு தேசத்தின்..... ஒரு இனத்தின் வரலாற்றில் ஒரு வினாடியாக இருக்கலாம். ஆனால் அந்தப் பத்தாண்டுகளில் தமிழ் மக்கள் கற்றுக் கொண்ட, கொள்ள வேண்டிய பாடங்கள் பலவாகும்.
ஸ்ரீலங்கா அரசின் இனவாத நடவடிக்கைகளைப் படிப்படியாக அனுபவித்து வந்த தமிழ் மக்கள் அதன் உச்சக் கட்டத்தை 1983 கறுப்பு ஜூலையில் அனுபவித்தனர்.

" கொழும்பில் அடி விழுகுது"
"ரயிலில் அடி விழுகுதாம்...." என்பது போய் எண்பதுகளில் யாழ்ப்பாணத்திலும் அடிகளும் கொலைகளும் விழத் தொடங்கின. குட்டக் குட்டக் குனியும் அகிம்சை அரசியலுக்கு மாற்றீடாக ஆயுத அரசியல் ஆரம்பமாகியது. அடி வாங்கியவர்கள் ஆயுதப்படையினரைப் பழி வாங்குவது ஆயுதப் போராட்டமாக பரிணாமம் பெற்றது.

காலகாலமாக தமிழ் மக்கள் மீது பேரினவாத அரசாங்கங்களினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத நடவடிக்கைகளின் விளைவாக தமிழ் மக்கள் மனங்களில் இருந்த வெறுப்பினதும் விரக்தியினதும் வெளிப்பாடே இப்போராட்டமாகும். இந்த விரக்திகள் பெரியவர்களின் பேச்சாக வெளிக்காட்டப்பட்ட போது அவை அசட்டை செய்யப் பட்டன. இந்த வெறுப்பும் விரக்தியும் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளாக உருவெடுத்த போது அவை பயங்கரவாதமென ஒடுக்கப்பட்டதுடன் அப்பாவி மக்கள் மீதும் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. 1983 ஜூலை இந்த வரலாற்றில ஒரு திருப்பு முனையாகும்.

தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிப் பாராளுமன்றத்தில் பேசிய தலைமைகள் பாராளுமன்றிலிருந்து வெளியேற்றப்பட்டன. இந்த நிலைமைகளில் தொடர்ந்த அரச பயங்கரவாதத்திற்கெதிராக ஆயுதம் ஏந்திய விடுதலைக் குழுக்கள் தமிழ் மக்களின் விரக்திகளை பிரதிபலிக்கும் அமைப்புகளாக உருவாகின. இந்த ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் படிப்படியாக அரச படைகளை முகாம்களுக்குள் முடங்க வைத்ததுடன் வட கிழக்கில் அரச இயந்திரங்களையும் ஸ்தம்பிதம் அடையச் செய்தன. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் அரசியல் தந்திரோபாயமானது பாராளுமன்ற அரசியலிலிருந்து ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்ததேயொழிய இந்த அமைப்புகளின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகளோ அல்லது அவர்களின் வர்க்க குணாம்சங்களோ எந்த வகையிலும் பழைய தலைமைகளிலிருந்து வேறுபடவில்லை. முதலாளித்துவ நோக்குக் கொண்ட தலைமைகளையும், குட்டி முதலாளித்துவ தளங்களையும் கொண்டிருந்த தமிழ் பாராளுமன்றக் கட்சி–நாணயத்தின் மறுபக்கமே புதிதாகத் தோன்றிய இயக்கங்களாகும். அடிப்படையில் குறுந்தேசியவாதமும், புரட்சிகரப் புலம்பல்களால் போர்த்தப்பட்ட குட்டிமுதலாளித்துவ அடிப்படை நோக்குகளும், அதிதீவிரத் தன்மைகளும்தான் இந்த இயக்கங்களின் குணாமசங்கள். இதனால், இந்த இயக்கங்களின் முறையான மூலோபாயமற்ற ஆயுதப் போராட்டங்கள், பாராளுமன்ற அரசியல் வாதிகள் சாதித்ததை விட வேறொன்றையும் அதிகமாகச் சாதித்துவிடவில்லை.

**தமிழ் பாராளுமன்றக் கட்சி– நாணயத்தின் மறுபக்கமே புதிதாகத் தோன்றிய இயக்கங்களாகும். அடிப்படையில் குறுந்தேசியவாதமும், புரட்சிகரப் புலம்பல்களால் போர்த்தப்பட்ட குட்டிமுதலாளித்துவ அடிப்படை நோக்கங்களும், அதிதீவிரத் தன்மைகளும்தான் இந்த இயக்கங்களின் குணாம்சங்கள்.**

தமிழ் பாராளுமன்ற அரசியல்வாதிகள் வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் ஆதரவைப் பெற்று வேறு எவரையும் தமது அரசியல் தளங்களுக்குள் நுளைய விடாமல் பாதுகாத்தது போலவே, இயக்கங்களும் தமது

www.tamilarangam.net

செல்வாக்கினை வடக்கிலும் கிழக்கிலும் நிலைநாட்டிக்கொண்டன. தமது அரசியல் தளங்களைப் பலப்படுத்திய பாராளுமன்ற அரசியல் வாதிகள் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கோ அல்லது தமிழ் மக்களின் வேறெந்த உரிமைகளையோ வென்றெடுக்க முடியாதவர்களாளகவே இருந்தனர். அவ்வப்போது பேச்சுவார்த்தைகள், வட்ட மேசைகள் ஆகியவற்றின் மூலம் தமது தலைமைத்துவங்களையும், வர்க்கநலன்களையும் பாதுகாத்துக் கொண்டனர். அவர்களின் வாரிசுகளான இயக்கங்களும் தமது முன்னோடிகளைத் தவறாது பின்பற்றினார்கள். அவர்கள் வாக்குப் பெட்டிகளினால் செய்தவைகள் இந்த இயக்கங்கள் ஆயுதங்களினால் மிகவும் குரூரமான முறையில் நடைமுறைப்படுத்தினர். வடக்கிலும் கிழக்கிலும் தமது ஆயுதக் கலாச்சாரத்தினால் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர். அவர்களின் தாகம் 'தமிழீழம்' என்றவர்களிடம் கூட மக்களின் பசிக்கும் பட்டினிக்கும் அன்றாடத் தேவைக்கும் மாற்று வேலைத் திட்டங்கள் எதுவும் இல்லை. பத்து வருடங்களுக்கில்லை, இருபது வருடங்கள் "போராடிய" பின்பும் அரிசிக்கும் மருந்துக்கும் அரசாங்க அதிபரின் அலுவலகத்திற்கு ஊர்வலம் போகும் அப்பாவிகளாத்தான் மக்கள் இருப்பார்கள்! எந்த விதமான வேலைத்திட்டங்களோ, முன்நோக்கோ இல்லாத போராட்டங்களினால் இறுதியில் மக்களுக்கு மிஞ்சியுது என்ன?

**இத்தனை வீரசாகஸப் போராட்டங்களுக்குப் பின்னும் – அமிர்தலிங்கத்திலிருந்து பிரபாகரன் வரை – பேரினவாத அரசாங்கம் எதைக் கொடுக்கப் போகின்றது – அரசி மருந்து உட்பட – என்று தமிழ் மக்கள் எதிர் பார்க்கும் நிலையே மிஞ்சியுள்ளது. இயக்கங்கள் மேலதிகமாகக் கொடுத்த பரிசு மக்கள் வாய் திறக்க முடியாத ஆயுதக் கலாசாரம்தான்.**

பாராளுமன்றக் கட்சிகள் முன் வைத்த சமஷ்டித் தீர்வுக்குத்தாம் தயார் என உரக்கக் கூவிகிறார்கள்! இதுதான் முடிவென்றால் இதுவரை காலமும் இவர்கள் நடத்திய "போராட்டங்கள்", மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், மரணங்கள், அகதி வாழ்க்கைகள் எல்லாம் எதற்காக?

அமிர்தலிங்கத்தின் தலைமையில் சமஷ்டி ஆட்சி பெற்றுக் கொள்ளாமல் பிரபாகரனின் தலைமையில் சமஷ்டியாட்சியைப் பெற்றுக் கொள்வதற்காகவா இத்தனை மக்கள் அகதிகளானார்கள்? இத்தனை இளைஞர்கள் மாவீரர்களானார்கள்?....இன்னும்....இன்னும்....

இத்தனை வீரசாகஸப் போராட்டங்களுக்குப்பின்னும் – அமிர்தலிங்கத்திலருந்து பிரபாகரன் வரை – பேரினவாத அரசாங்கம் எதைக் கொடுக்கப் போகின்றது –அரிசி மருந்து உட்பட– என்று தமிழ் மக்கள் எதிர் பார்க்கும் நிலையே மிஞ்சியுள்ளது. இயக்கங்கள் மேலதிகமாகக் கொடுத்த பரிசு மக்கள் வாய்திறக்க முடியாத ஆயுதக் கலாசாரம்தான்.

இவற்றின் அடிப்படைக் காரணந்தான் என்ன? ஒடுக்குமுறையை நடைமுறைப் படுத்தும் பேரினவாதவரசை மாற்றியமைக்கும் அரசியல் மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும் தமிழ்த் தலைமைகளிடம் இல்லாமல் போனதுதான் காரணம். வடகிழக்கு மாகாணத்திற்குள் ஆயுதப் போராட்டங்களை நடாத்தி மத்தியிலிருக்கும் அரசை அடிபணிய வைக்க முடியுமென்ற குண்டுச் சட்டிக்குள் குத்துக்கரணம் போடும் குறுந்தேசியவாதச் சித்தாந்தங்கள் – வடகிழக்கை – விடுவிக்கப்பட்டப் பிரதேசங்களாக்குவதற்குப் பதிலாக முற்றுகையிடப்பட்ட பிரதேசங்களாகவே உருவாக்கியுள்ளது. இனவொடுக்குமுறைக்கு வித்தான பேரினவாத அரசை தோற்கடிக்கக் கூடிய அகில இலங்கை ரீதியான அரசியல் மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்களற்ற குறுந்தேசியவாதத் தலைமைகள் சாதித்தது இல்வளவுதான்.

இவர்கள் தலைமகளின் கீழ் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் ஒழியப் போவதுமில்லை. தமிழ் மக்கள், குறுகிய தேசியவாத அரசியலிலிருந்து விலகி, பேரினவாத அரசிற்கெதிரான சகல தேசிய சக்திகளின் ஐக்கிய முன்னணியிலமைந்த போராட்டப் பாதை ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வரை அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போவதுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ராஜனியிலிருந்து

*"ஒவ்வொருத்தனும் தனக்குரிய சவப்பெட்டியைச்சுமந்தபடியே*
*தனது ஒவ்வொரு வேளை*
*உணவையும் உண்கிறான்"*

எனும் சிவரமணியின் வரிகள் யுத்தச்சூழலின் இருப்பின் அகோரத்தையும், நிச்சயமற்ற வாழ்வையும், மரணத்தை எந்தநேரமும் எதிர்கொள்ளக்கூடிய நிலையையும் பறைசாற்றுகிறது.
ஆள்பவரை எதிர்த்து போராடுபவர்களும் தமது சவப்பெட்டிகளை நிதமும் தோளில் சுமந்துகொண்டுதானிருக்கிறார்கள்.

ஆட்சி செய்பவரின் அடக்குமுறைக்குள் சிக்கித் தவிப்பதோடு, அவர்களை எதிர்த்துப் போராடத் துப்பாக்கி ஏந்தியவர்களின் அராஜகம் கண்டு அச்சம் கொண்டு வாழவேண்டிய துரதிஷ்டம் அநேகமாக போர் நிகழும் தேசங்களில்!
எமது மண்ணின் கதையும் அதுதான்.

இன்று சிறிலங்கா அரசின் பேரினவாதத்திற்கு எதிராக போராடுகிறோம் என ஆயுதமேந்தியவர்கள், தாம் யாருக்காகப் போராடுகிறார்களோ, அந்த மக்களுக்கெதிராக தமது துப்பாக்கிகளை நீட்டிய துர்ப்பாக்கிய வரலாறு எமது மண்ணில்.

இராணுவ அட்டூழியங்களும், மனிதஉரிமை மீறல்களும் ஒருபுறமிருக்க, அவர்களுக்கு எதிராக ஆயுதமேந்தியவர்கள், தாங்களும் எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என காட்டும் முகமாக. மனித இனமே வெட்கித் தலைகுனியும்படியாக, அப்பாவி பொதுமக்கள், மாணவர்கள், புத்திஜீவிகள், மனிதயுரிமைவாதிகள், பெண்ணிலைவாதிகள், என இவர்களது கொலைப்பட்டியல் நீளுகிறது.

அரசபடைகளினால் நடாத்தப்படும் பாலியல்பலாத்காரங்கள், கொலைகள் எத்தனை கொடூரமானது என்பது சொல்லித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மரியா இலேனா மோயானோ வரை

தெரிய வேண்டியதொன்றல்ல. அவர்களை எதிர்க்க புறப்பட்ட இயக்கங்களும் தாமும் அதே கீழ்நிலைக்கு இறங்கி, ஆளும் அரசின் அடாவடித்தனங்களை எதிர்த்து போராட முற்பட்டவர்களை கொலை செய்துள்ளார்கள்.
இத்துயரநிலை இலங்கையில் மட்டுமல்ல, ஏனைய நாடுகளிலும் இருக்கத்தான் செய்கிறது.

இலங்கையரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் புலிகளினால் நடாத்தப்பட்ட **ராஜனியின்** கொலையும், பேருவில் பியுஜி மோரியின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் போராடும் "**ஒளிரும் பாதை**"யினரால் நடாத்தப்பட்ட **மரியா எலேனா மோயானோவின்** கொலையும் இங்கே முக்கியபடுத்தப்படவேண்டியுது அவசியமாகிறது.

" *புறநிலை யதார்த்த நோக்கினடிப்படையில், உண்மை மீதான வேட்கை, விமர்சன ரீதியாக நேர்மையான நிலைப்பாட்டை வெளிக்கொணர்தல் போன்றவை எமது சமூகத்திற்கு இன்று தேவையானவை மட்டுமல்ல, அது எம்மில் பலரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். எமது சமூகம் அழிவில் இருந்து தப்பிப் பிழைப்பதற்கு நாம் இந்நிலைப்பாட்டை எடுப்பது இன்றியமையாததாகிறது* " எனக்கூறி தனது உயிரைத் துச்சமென மதித்து, மனித உரிமை மீறல்களுக்காக குரல் கொடுத்தும், போராட்டத்தின் தவறுகளைவிமர்சித்தும் செயலாற்றியவரும், எமது போராட்டத்தின் முக்கியப் பதிவான '**முறிந்த பனை**' யினை எழுதியவர்களில் ஒருவரும், பெண்ணிலைவாதியுமான *ராஜனி புலிகளின் கொலைவெறிக்கு 21.09. 1989 அன்று பலியாகினார்.*
தமது கருத்துகளுக்கு முரணான கருத்துக்களை கொண்டிருந்தார் என்ற காரணத்தினால் இப்பெண் தெருவில் வைத்து கொலை செய்யப்பட்டார்.
போரின் அழிவுகளால் பாதிப்புக்குள்ளாகிய பெண்களினதும், பெண்குழந்தைகளினதும் காப்பகமாக விளங்கிய '**பூரணி**' யை ஸ்தாபிப்பதில் ராஜனி முக்கிய பங்கு வகித்தார்.

எமது சமூகத்தில் புரையோடியிருக்கும் பிற்போக்குத்தனங்களை அப்படியே தன்னகத்தே கொண்டே அதிகமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்கள் இயங்கின. ஒரு சில இயக்கங்கள் மாத்திரம் தமது ஏடுகளில் பெண்விடுதலை பற்றிய கோசங்களை முன்வைத்தாலும், இயக்கத்திற்குள் பெண்களுக்கென கருதப்பட்ட பாரம்பரிய பாத்திரங்களையே அவர்கள் ஏற்க வேண்டியிருந்ததோடு, 'சமையல் வேலை' அதிகமாக பெண்போராளிகள் மீதே சுமத்தப்பட்டிருந்தது. முடிவெடுக்கும் இயக்கத்தலைமைகளில் என்றும் பெண்கள் அங்கம்வகிக்கவில்லை.

பெண்களும் ஆயுதம் ஏந்துகிறார்கள், பெண்கள் விடுதலையடைந்துவிட்டார்கள் என வெளியுலகிற்கு கவர்ச்சி காட்டுவதற்காகவே அனேக இயக்கங்கள் பெண்களை பயன்படுத்துகிறார்கள்.
"ஏனைய சமூகத்து பெண்களைவிட தமிழ்ப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் அதற்கு எமது தலைவர் தான் காரணம்" எனப் புலிகளின் மகளிர் பிரிவைச் சேர்ந்த ஜெயா கூறுவதிலிருந்து அவர்களின் பெண்விடுதலை பற்றிய தெளிவின்மை தெரிகின்றது.
இவர்களின் மகளிர் குழுவினால் கூட ராஜனியின் கொலையைத் தடுத்து நிறுத்தமுடியாமல் போய்விட்டது.
புலிகளின் பெண்ணிலைவாதிகள் மீதான வெறித்தாக்குதல்கள் தொடர்வதை செல்வியின் கடத்தல் எமக்கு புலப்படுத்துகிறது.

ராஜனி கொலை செய்யப்பட்டு கிட்டத்தட்ட மூன்று வருடங்களின் பின், பேருவின் சுயாதின பெண்கள் அமைப்புகளில் ஒன்றான "Glass of milk" எனும் அமைப்பைச் சேர்ந்த பெண்ணிலைவாதியான மரியா இலேனா மோயானோ, 1992ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 15ம் திகதி ஒளிரும் பாதையினரால் கொலை செய்யப்பட்டு, பின் குரூரமாகக் குண்டு வைத்து தகர்த்தெறியப்பட்டார். இக்கொலை " ஒளிரும் பாதையின் " தலைவரான அபிமால் குஸ்மானின் நேரடிக் கட்டளையின் பேரிலே நடாத்தப்பட்டதென தெரியவருகிறது. இவர்களது அனைத்துக் கொலைகளும் மரியா கொலை செய்யப்பட்ட பாணியிலே அமைகிறதாம்!

தமது புரட்சியைத் தவிர வேறு புரட்சியில்லை, தமது கட்சியைத் தவிர வேறு கட்சியில்லை, தம்மைத் தவிர்ந்த எந்த பிரதியீடும் இல்லை, தமது பெண்புரட்சியாளர்களைத் தவிர ஏனைய பெண்புரட்சியாளர்கள் இருக்கக்கூடாது என்பதே ஒளிரும் பாதையினது துப்பாக்கிச்சட்டமாகவிருக்கிறதாம்.
மரியா மாத்திரமல்ல, " Glass of milk" ஐச் சேர்ந்த ஏனைய பெண்ணிலைவாதிகளும் இவர்களது கொலைவெறிக்கு ஆளாகியுள்ளார்கள்.

ஒளிரும் பாதையைச் சேர்நத பெண் அங்கத்தவர்களை அபிமால் குஸ்மான் " எமது புதல்விகள்" என்றே அழைப்பது வழக்கமாம்!
இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் தாய்மையடைவது தடைசெய்யப்பட்டுள்ளது. தம்பதிகளுக்கு சில கட்டுப்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளது. இயக்கத்திற்குள் திருமணங்கள் பதவி மட்டங்களிற்கேற்பவே அனுமதிக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தார்கள் உத்தியோகத்தர்களையும், தலைவர்கள் தலைமைப்பீடத்திலிருப்பவர்களையுமே மணம் செயதுகொள்ளலாம். பாலியல் உறவு சம்பந்தப்பட்ட உணர்ச்சி பூர்வமான விடயங்கள் ஆயுதப்பிரிவிலுள்ளவர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பேருவின் பெண்கள் அமைப்புகளின் வரலாறு பற்றிய சிறு குறிப்பை இங்கு எழுதுவது அவசியமாகிறது. பேருவின் பெண்கள் இயக்கங்களின் செயற்பாடுகள் இன்று முனைப்படைந்த நிலையிலேயேயுள்ளது. 1960 – 1970களில் சர்வதேசரீதியாக ஏற்பட்ட பல வரலாற்று நிகழ்வுகளுக்கு – கியுபாப் புரட்சி, பிரான்ஸ் மாணவர் எழுச்சி, வியட்நாம் போர் – பிற்பாடு, பேருவிய பெண்களில் பெரும்பாலானோர் அரசியல் கட்சிகளில் அங்கம்வகிக்கலானார்கள். பேருவிய பெண்கள் இயக்கங்களில், பெண்ணிலைவாதிகள், மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்கள், பாரம்பரிய அரசியலில் ஈடுபட்டவர்கள் என மூன்று பிரிவுகள் இடம்பெற்றன.

அவற்றில் எல்லா வர்க்கங்களைச் சேர்ந்த பெண்கள் அங்கம் வகித்தாலும் அனேகமானவர்கள் மத்தியதரவர்க்கததைச் சேர்ந்தவர்களாகவேயிருந்தார்கள். 1980களின் பேருவிய பெண்களின் வாழ்க்கைமுறை பொருளாதாரக் காரணிகளால் மாற்றம் பெறப்பட்டு, அவர்கள் கூடிய நேரம் வேலை செய்யவேண்டியவர்களாகவும், தமது குடும்பத்தைக் காப்பாற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டார்கள். இது அவர்களை அமைப்பாவதற்கும், கூட்டுமுடிவுகளை எடுக்கவும் ஏதுவாக்கியது.
பெருவிய பெண்ணிலைவாதிகள் இனம், வர்க்கம், பால்ரீதியான பாகுபாடு போன்றவற்றைக் கருத்திற் கொண்டு தமது செயற்பாடுகளை நகர்த்தினார்கள். கூடுதலான சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன.

1980களில் கருக்கலைப்பு விடயத்தில ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளினால் பல பெண்ணிலைவாதிகள் இடதுசாரிக்கட்சிகளை விட்டு விலகி சுயாதினமாக இயங்க ஆரம்பித்தார்கள்.
இவர்களது ஆரம்பகால நடவடிக்கைகள், பெண்களின் பிரச்சனைகளில் மட்டும் மையப்படுத்தப்படாமல், தொழிலாளர், விவசாயிகள், சுரங்கத்தொழிலாளர்கள் ஆகியோர் மீதான சுரண்டல் என விஸ்தரிக்கப்பட்டிருந்தன.

*ராஜனி, மரியா இலேனா மோயானொ ஆகிய இரு பெண்ணிலைவாதிகளின் கொலைகளும் எமக்கு எதை கூறி நிற்கின்றன?*
*ஒரு துப்பாக்கிக் கலாசாரம், பெண்கள் தமது சுய உரிமைக்காக போராடுவதையும் , சுயாதீனமாக மனிதவுரிமை மீறல்களுக்காக குரல்கொடுப்பதையும் தடைசெய்வதன் மூலம் பெண்களின் தனித்த இயக்கத்திற்கெதிராகவும் தடைவிதிக்கின்றது என்பதைத்தான்.*
*இத்தகைய கொலைகள் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படுவது, இன்று பெண் விடுதலைக்காக குரல் கொடுக்கும் அனைவரினதும் முன்னுள்ள கடமையே.*

✱ உமா

# நிற்கிறேன்

*பதினாறு வருடமென்று*
*நினைக்கின்றேன்*
*இருக்கலாம்........*
*ஏனென்றால்*
*என்னோடு படித்த*
*ஏக்கநாயக்காவும்*
*ஏப்ரஹாம் சில்வாவும்*
*எஸ்ஸெஸ்ஸியில்*
*கோட்டை விட்டும்*
*வங்கியில்*
*எக்கவுண்டனாகி*
*பதினாறு வருடங்கள்*
*நான் ...........?*
*எஸ்ஸெஸ்ஸியில்*
*இரண்டு 'டி'யும் மூன்று 'சி'யும்*
*மூன்று 'எஸ்ஸ'ும் பெற்று*
*என்ன பயன்.......?*
*அப்போது*
*ஏறி இறங்காத*
*நிறுவனங்களோ*
*டிப்பார்ட் மேன்ட்களோ*
*இல்லை.*
*ஆயினும்*
*உத்தியோகம் கிடைக்கவில்லை*
*ஏன்.....? ஏன்...?*
*இந்தியத் தமிழனாம்*
*பிரசா உரிமை இல்லையாம்*
*இன்றும் முயற்சி*
*பயன்...?*
*ஓவர் ஏஜாம்.*
*அதனால்*
*மாடு வளர்க்க*
*லோன் கேட்டு நிரப்பிய*
*விண்ணப்பத்தை உறுதிப்படுத்த*
*ஏக்கநாயக்கா முன்*
*கைகட்டி நிற்கிறேன்.*


– தெமோதரை தமணி

( நன்றி : வீரகேசரி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அர்த்தங்கள் புரியாத உறவுகள்

❄ ப.வி.ஸ்ரீரங்கன்

ஆச்சியில்லை
அப்பு இல்லை
ஐரோப்பிய அகதி வாழ்வில்
என் பிள்ளைக்கு
அள்ளி அணைக்க
கிள்ளிக் கொஞ்ச
மெல்லக் கால் பிடித்து
எண்ணை தேய்த்திட

உச்சி மோந்து
கள் வெறி கொள்ளும்
பாட்டனும் இல்லை
நான் அகதியாய்
புது முகம் தாங்கி
சிகப்பு மானிடர்களுக்குள்
என்னைப் புதைக்க
என் மகன் கேள்விக் கணையுடன்
என் முன் நிற்பான்

"நாம் இலங்கையர்கள்
இது எங்கள் நாடில்லை
நாங்கள் அகதிகள்"
ஐந்து வயதில் அகதிப் பாடம் பெறுவான் என்
மகன்
நெஞ்சு கனத்து
கண்ணீர் பூத்து
வெறுமையை உணர்ந்து
கத்தி – பொல் – தடிகள்
'டொச்லண்ட் டொச்காரர்களதுதான்' கண்டு

கூனிக் குறுகும் எம்மையும்
துள்ளிக் குதிக்கும் தன்னையும்
முறைத்துப் பார்த்துப் போகும் காலமாய்
அவன் இளம் பருவம்
ஆச்சி அப்பு
அர்த்தங்கள் புரியா உறவாய்
வெறும் குறியீடாய்
அர்த்தம் பெறாத தமிழ் வார்த்தைகளாய் நாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேர்மனியில் தொடர்ந்து நடைபெற்று வரும் பெண்கள் சந்திப்பின் பத்தாவது தொடர் 25.09.93 அன்று புறூக்சால் நகரில் நடைபெற்றது.

அன்று பெய்த கடும் மழையின் காரணமாக, போக்குவரத்துகள் தாமதித்ததால், கூட்டம் தாமதித்தே ஆரம்பமாகியது. 35க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிரலில் தயாரிக்கப்பட்ட ஒரு சில நிகழ்ச்சிகள், தாமதத்தின் காரணமாகவும், நடைபெற்ற இரு நிகழ்ச்சிகளும் கூடிய நேரத்தை எடுத்தமையினாலும், தவிர்க்கப்பட்டன.

### பிள்ளைகள் மீதான பாதிப்பு

முதல் நிகழ்ச்சியான " பெற்றோர்களுக்கிடையில் ஏற்படும் மனக்கசப்பால் பிள்ளைகளின் மீதான பாதிப்பு " நிகழ்ச்சியில் பல பெண்கள் தங்கள் கருத்துக்களையும், அனுபவங்களையும் எடுத்துக் கூறினர். பெற்றோர் பிள்ளைகளுக்கு முன் தங்கள் கோபதாபங்களை காட்டிக்கொள்ள கூடாதென்றும், அதனால் பிள்ளைகளின் மனதில் வெறுப்புகள் வளரலாம் என்று ஒரு சில பெண்களும், பிள்ளைகள் பிரச்சனைகளை தெரிந்து வளருவது நல்லதென்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. சற்று நேரத்திற்குப்பின், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் ஏற்படும் மனக்கசப்புப் பற்றிய கலந்துரையாடலாக உருப்பெற்றது. கலந்துரையாடல் ஆரோக்கியமானதாக இருந்தபோதும் நேரம் இருக்கவில்லை. பெற்றோரா, பிள்ளைகளா திருந்த வேண்டும் என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டன.

### மலர் வெளியீடு

இரண்டாவதாக மலர் வெளியீடு எனும் நிகழ்ச்சி நடைபெற்றது. பெண்களின் உழைப்பால் வருடத்திற்கு ஒரு மலர் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செயல். புகலிடத்தில் வாழும் பெண்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடவும், மற்றைய பெண்களுக்கு எடுத்துக் கூறவும், ஆணாதிக்கத்தை எதிர்த்து போராடவும் இது போன்ற பெண்களால் ஆன வெளியீடுகள் அவசியம் தேவை. இம்முறை அதிக பக்கங்களோடு பார்க்க நிறைவாகவிருந்தது. இதில் எழுதப்பட்ட கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எல்லாம் தினமும் சராசரி வாழ்க்கையோடு போராடும் பெண்களால் எழுதப்பட்டவை. இம்மலரை கட்டாயமாக எல்லா ஆண்களும் வாசிக்கவேண்டும்.

### கருக்கலைப்புத் தடைச்சட்டம்

நிகழ்ச்சியில் இம்முறை 'கார்ல்ஸ்ருக' (Karlsruhe) நகரில் இயங்கும் சோசலிஸ ஜேர்மன் பெண்கள் அமைப்பைச் சேர்ந்த இரு பெண்கள் வருகை தந்திருந்தனர். இவர்கள் 218வது கருக்கலைப்புத்தடைச் சட்டத்தைப் பற்றி தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினார்கள். செய்திகளில் அறிந்தவையைவிட இவர்களின் விளக்கம் எமது பெண்களுக்குத் தெளிவாக விளங்கியது.



பெண்கள் சந்திப்பு

'ஜேர்மன் பெண்களை கூடுதலாக பிள்ளைகளைப் பெற வைப்பதற்காக, ஆண்களால் இயற்றப்பட்ட சட்டம் என்றும், பெண்ணின் உடம்போடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பந்தப்பட்ட விடயத்தைக் கூட ஆண்களே முடிவெடுக்கும் நிலையின் மூலம் எவ்வளவு தூரம் ஆணாதிக்கம் பெண்களை நசுக்குகின்றதென தெரிவித்தனர். 1993 மார்ச் மாதத்திற்குப் பின் இச்சட்டங்கள் இறுக்கமாயின, தற்போதைய சட்டத்தின்படி, ஒரு பெண் பலாத்காரம் மூலம் உருவாகும் கருவைக் கலைப்பதற்கு சட்டத்தின் முன் பலாத்காரப்படுத்தப்பட்டது நிரூபிக்கப்படவேண்டும். வீட்டு வசதியின்மை, பணவசதியின்மை போன்ற காரணங்கள் காட்டப்படவேண்டும், அத்துடன் இதுவரைகாலமும் கருக்கலைப்புச் செய்வதற்கு வைத்திய காப்புறுதி நிறுவனம் செலவுகளைப் பொறுப்பேற்றது, இனிமேல் பெண்கள், தங்கள் செலவிலேயே இதைச் செய்யவேண்டும். ( இதற்கு கிட்டத்தட்ட 2000 அல்லது 3000 மார்க்குகள் செலவாகும்.) ஆலோசனை நிறுவனங்கள் கூடியளவு மனதை மாற்றக்கூடிய அளவில் தான் இயங்குகின்றன போன்ற கருத்துக்களைத் தெரிவித்தனர்.

### துருக்கிப் பெண்களுக்கு சத்திரசிகிச்சை

பல வெளிநாட்டுப் பெண்கள், உதாரணமாக துருக்கியப் பெண்களுக்கு இச்சட்டத்திற்கு எதிர்மாறாக அவர்களின் சனத்தொகையை குறைப்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் மூலம் அல்லது அவர்களுக்குச் செய்யப்படும் வயிற்றுச் சம்பந்தமான சத்திரசிகிச்சைகள் மூலம் கருத்தங்காத அளவிற்கு மறைமுகமாக ஒரு சில வைத்தியர்கள் செயற்படுகிறார்கள் எனவும், இவற்றில் சில நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்ததாகவும் தெரிவித்தனர்.

எதிர்கால ஆலோசனைகளில் முக்கியமாக, ஜேர்மனியில் அண்மைக்காலங்களில் தமிழ்ப் பெண்களைத் துன்புறுத்துதல், கொலை செய்தல் போன்றவற்றிற்கு எதிராக துண்டுபிரசுரங்கள் மூலம் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இறுதியாக கலைநிகழ்ச்சிகளில் கார்ல்ஸ்ரூகவையும், அண்மித்த நகரங்களையும் சேர்ந்த பெண்களால் ஒரு நாடகம் நடித்துக்காட்டப்பட்டது. இன்றும் பல பெண்கள் கணவன்மார்களால் துன்புறுத்தப்பட்டு, அடிமைகளாக வீட்டுக்குள்ளேயே முடங்கி, கணவன் இல்லாவிட்டால் ஒரு வாழ்க்கை இல்லையென மறைந்து மறைமுகமாக வாழ்கின்றார்கள். இவர்களை வெளியில் கொணர இந்நாடகம் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. இதில் நடித்தவர்களின் முகபாவங்கள் இயற்கையாக இருந்தன. மாமியாரின் பாத்திரத்தை மறக்கமுடியவில்லை. இவர்கள் பாடிய பாடலும் நன்றாகவே இருந்தது.

அடுத்த பெண்கள் சந்திப்பு டுயிஸ்பேர்க் நகரில் நடைபெறுவதாக தீர்மானிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

(3ம் பக்கத் தொடர்ச்சி )

தமிழ் மக்கள் நிராகரித்துள்ள வடக்கு கிழக்கைப் பிரிக்கும் தீர்வினை உள்ளடக்கிய அறிக்கையையே வெளியிட்டுள்ளனர். இந்த அறிக்கை எவரையும் திருப்திப்படுத்தவோ அல்லது இனப் பிரச்சனையைத் தீர்க்கப் போவதோ இல்லை என்பது தெளிவு.

பயங்கரவாதிகளினாலேயே இனப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை என்ற இந்த அரசாங்கத்தின் நொண்டிச்சாக்கினை எவரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஆயுதம் ஏந்தியவர்களினால்தான் பிரச்சனையானால், ஆயுதங்களைக் கீழே போட்டு ஜனநாயக நீரோட்டத்துடன் இணைந்து கொண்ட இயக்கங்களுக்கும், என்றும் ஆயுதமே ஏந்தாத தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இந்தப் பேரினவாத அரசாங்கம் எந்த வகையான தீர்வினை முன் வைத்துள்ளது? அல்லது அரசின் அடிவருடி இயக்கங்களுக்கும், அரச படைகளுடன் இணைந்து போராடும் இயக்கங்களுக்கும் எந்தத் தீர்வினைக் கொடுத்திருக்கின்றது? மொத்தத்தில் இனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வுமே இல்லாத இந்த அரசாங்கம் தொடர்ச்சியான இனவொழிப்பு நடவடிக்கைகளிலும், தொடர்ந்து எரியும் பேரினவாத நெருப்பிலும் குளிர் காய்ந்து கொண்டு, போருக்கு வெகு தொலைவில் வாழும் தமது ஆதரவாளர்களுக்கு சுகபோகங்களை உறுதி செய்யும் ஆட்சியையே தொடர விரும்புகின்றது. எந்த வகையிலும் இராணுவ பலத்துடன் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் எந்தத் தீர்வும் அவர்களைத் திருப்திப்படுத்தவோ அல்லது அவர்களுக்கு நன்மை தரப் போவதோ இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தரிப்புக்குறிப்புக்களும் கண்டுபிடிப்புக்களும்

பருத்தித்துறையிலிருந்து சென்ற எனது நண்பன் மைக்கல், அமெரிக்காவுக்குப் பக்கத்திலுள்ள கனடாவைக் கண்டுபிடித்தான். அதற்கு அத்தாட்சியாக மூன்று வரி ஹைகூ கவிதையொன்றை அனுப்பியிருந்தான்.

*நிலவை உடைத்தேன் ஆவல் மீற*
*உள்ளிருந்ததோ*
*இருளின் கண்கள்.*

ஐரோப்பாவிலிருந்து சென்ற கொலம்பஸ் அமெரிக்காவைக் கொன்று பிடித்த ஐநூறு ஆண்டுகளின் பின் தான் நான், ராஸ்தா, அல்போனஸ், சிறி, யூனா எல்லோரும் ஐரோப்பாவைக் கண்டுபிடித்தோம்.

ஜேர்மனியை நாங்கள் கண்டுபிடித்த பின்புதான் சிறைக்கைதிகளாக்கப்பட்டோம். ஜேர்மனி, டொச்லான்ட் என்ற பொருளில் துப்பரவு செய்யப்பட, நாங்கள் வீசி எறிவதற்கொப்பான குப்பைகளானோம்.
யூதர்களின் அவலச்சுவடுகள் மீண்டும் மிதந்துவர நாங்கள் சிறையினுள் ஒடுங்கியிருந்தோம்.

நான் இலங்கையன், ராஸ்தா, அல்போனஸ், சிறி, யூனா ஆபிரிக்கர்கள், முறையே நைஜீரியா, எபிக்கோஸ் கம்பியா, லைபீரியாவைச் சேர்ந்தவர்கள் பின்பு சல்வத்தோறையும் வந்தான். அவன் இத்தாலியன்.

பழைய சிறை துப்பரவு செய்யப்பட்டதன் பெயரில் கைதிகள் வெவ்வேறு நகரங்களிலுள்ள சிறைகளுக்கு மாற்றப்பட்டனர். பழைய சிறை இனி ஜேர்மனியக் கைதிகளுக்கு மட்டுமே என்று பேசப்பட்டது.

☆ ☆ ☆ ☆

ராஸ்தாவும் நானும் இன்னும் சில கைதிகளும் பஸ் ஒன்றில் ஏற்றப்பட்டோம். அது நான்கு பேர் கொள்ளக்கூடிய, குட்டி அறைகளைக்கொண்ட நீண்ட பஸ்.

ராஸ்தா, நான், இரண்டு யூகோஸ்லாவியர்கள், இந்த நால்வரும் பஸ்ஸின் குட்டிச்சிறை ஒன்றுக்குள்ளிருந்தோம். பஸ் ஓடிக்கொண்டிருந்தது. ராஸ்தா கதைத்துக்கொண்டிருந்தான். அவன் எங்கள் மூவரில் யாருடனும் பேசவில்லை. யாருடனோ கதைத்துக்கொண்டிருந்தான். இரண்டு மாதங்களின் பின்னர் பஸ்ஸின் சிறிய கண்ணாடி வழியாக மரங்களைப் பார்க்கமுடிந்தது.

ராஸ்தா அலட்சியமாய் விடப்பட்ட சுருண்ட கட்டையான தாடி. கீழ்வாய் உதடுகளை முட்ட எத்தனிக்கும் மீசை பிரித்தெடுக்க முடியாத ஒன்றுடன் ஒன்று ஒட்டிப்போன, நீண்டு சுருண்ட தலைமுடி. அவன் பெயர் றொபேட். ராஸ்தா என்றே அழைத்தோம்.

அவன் யாரையும் இலட்சியம் செய்வதாயில்லை. தொடர்ந்து கதைத்துக் கொண்டும், இடையிடையே திட்டிக் கொண்டுமிருந்தான். நிறுத்தவில்லை.
உயர்ந்த கடவுளிடமும், தன் ஆத்மாவுடனும் பேசிக் கொள்கின்றானாம். அவன் அப்படித்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லிக்கொண்டான். கைதிகள் எல்லோரும் இவன் கிறுக்கன் என்றே பேசிக்கொண்டனர்.

காற்சட்டைப்பையில் கையை விட்டு ஏதோ தேடிக்கொண்டிருந்தான். ஒன்றும் அகப்படவில்லை. குனிந்து, பொலித்தீன் பாக் ஒன்றை எடுத்தான். அதிலிருந்து காகிதச்சரையொன்றை எடுத்தான். மோசமான நெடி. ஒட்டி உறிஞ்சி வீசப்பட்ட சிகரட், ரபாக் அடிக்கட்டைகள். ஒரு விரல் நீளமான காகிதம் ஒன்றைக் கிழித்து , அதன் மேல் ரபாக் தூள்களை உதிர்த்தி புதிய ரபாக் சுருளொன்றை தயாரிக்க முயன்றான்.

ஏய் ராஸ்த்தா! அதை வீசு. இந்தா என்று ஒரு சிகரெட்டை நீட்டினேன். பற்றவைத்துக்கொண்டான். க்ளுக் . . . . க்ளுக் ஒரு விக்கல் சிரிப்பு. அவன் விக்கல் சிரிப்பு எப்பொழுதும் முப்பது வினாடிகளுக்கு குறையாது இருக்கும். எனது உடுப்புக்கள் இருந்த பாக்கின் மேல் ஒரு அப்பிள் தெரிந்தபடியிருந்தது. அதை அடிக்கடி பார்ப்பதும் சிரிப்பதுமாகவிருந்தான்.

ஏய்! இந்த அப்பிளை எனக்குத் தருவாயா?
தாராளமாக. இந்தா எடுத்துக் கொள் என்றேன்.
அப்பிளைக் கடித்தபடியும் புகைத்தபடியும் பாடத்தொடங்கினான். அது ஓர் ஆபிரிக்கப்பாட்டாக இருக்கவேண்டும்.

ஒப ஒப நம் கிம் கொ . . . ஒப ஒப ம் கிங் கொ . . . .

யூகோஸ்லாவியர்கள் இருவரும் கைதட்ட, நான் பஸ்ஸின் சுவரில் தாளம் போட அவன் தலையையும் தோள்களையும் ஆட்டி பாடிக்கொண்டிருந்தான். இடையில் பாட்டை நிறுத்தி விட்டு,
ஏய்! ஏய்! என்றபடி என் தோள்களைத்தட்டினான்.
ஏய் . . . அப்பிள் அப்பிள் . . .
என்னிடம் ஒன்றுதான் இருந்தது. அதைத்தான் தந்துவிட்டேனே என்றேன்.

அது இல்லை . . . அப்பிள் . . . அப்பிள் . . . உனக்குத் தெரியுமா?
ஒரு வார்த்தையை இரண்டு தடவைகள் உச்சரித்தான். சிலவேளை நான்கைந்து தடவைகள் கூட உச்சரித்தான்.

எங்கள் மூவரில் ஒருவர்க்கும் ஒன்றும் விளங்கவில்லை. தனக்குள் பேசிவிட்டு
ஓம் . . . அப்பிள் . . . அப்பிள் . . .

தலைக்கு மேல் வலது கையை உயர்த்தி விரலைச்சுரண்டியபடி உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா? . . . அ. . ஆ . . ஆண்களும் ஆண்களும் தங்களின் அன்பை தெரிவிக்க அப்பிள் பரிமாறிக் கொள்ளலாம் என்ன?
இது நல்ல விசயம் . . . இது நல்ல விசயம். அதுதான் சரியானது . . . அது சரியானது என்றபடி மீண்டும் பாடத்தொடங்கினான்.

நான் யன்னலின் சிறு கண்ணாடி வழியாக மரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். மறுபடியும் என்னைச் சுரண்டினான்.

ஏய் . . . தக்காளி . . . தக்காளி . . . மீண்டும் தலைக்கு மேல் வலதுகையை உயர்த்திச் சுண்டியபடி பெண்களும் பெண்களும் தங்களின் அன்பை தெரிவிக்க தக்காளி பரிமாறிக்கொள்ளலாம் என்ன. இது நல்லது. . . இது நல்லது.

இனிமையான விசயம் . . . இனிமையான விசயம் . . . அ. . ஆ . . மீண்டும் நீண்ட விக்கல் சிரிப்பு. வெள்ளை பற்களும் வெளிச்சமான கண்களும். நானும் அவன் கூற்றிற்கு தலையாட்டிவிட்டு,
மனிதர்களும் மனிதர்களும் தங்கள் அன்பைத் தெரிவிக்க கோதுமையும் அரிசியும் பரிமாறிக்கொள்வதில் தடைகள் விழுந்துவிட்டனவே! என்று கவலை தெரிவித்தேன்.
அ . . ஆ. . . நீ மனிசன் . . . நீ சரி . . . நீ சரி . . . என்றபடி பொலித்தீன் பையிலிருந்து சில காகிதங்களையும் டைம் சஞ்சிகை ஒன்றினையும் எடுத்தான். சஞ்சிகையின் அட்டைப்படத்தில் உள்ள புஷ்ஷின் தலையிலும் கிளின்டனின் தலையிலும் புள்ஷிட் என்று எழுதப்பட்டிருந்தது – காகிதங்களில் தாறுமாறாக எழுதியிருந்தான்.

தான் நினைத்ததை உச்சரித்தபடியே உயர்ந்த கடவுளரையும் ஆத்மாவையும் நோக்கி அவர்களுடன் பேசியபடியே எழுதத் தொடங்கினான்.
உனக்குத் தெரியுமா . . . உனக்குத் தெரியுமா?
எனக்குத் தெரியும். இந்த வெள்ளையர்களின் இனவெறி எந்தளவு என்று எனக்குத் தெரியும். நான் களைத்துப் போய்விட்டேன். இந்த வெள்ளையர்களினால் நான் நிறையவே களைத்துப் போய்விட்டேன். நான் வீட்டிற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகவேண்டும். நைஜீரியா எனது வீடு. நான் வீட்டிற்குப் போகவேண்டும் . . .

அவன் கைகளால் மேலே எழுதமுடியவல்லை. தூஷணங்களை உச்சரித்தபடியே மீண்டும் எழுத முயன்றான். முடியவில்லை. அந்த காகிதத்தை வைத்துவிட்டு புதியதொன்றையெடுத்து அத்தியாயம் ஒன்று, அத்தியாயம் இரண்டு என்று மேலிருந்து கீழாக பத்து வரை எழுதினான்.

அத்தியாயம் ஒன்றில் ஜப்பான் என்றும் அத்தியாயம் பத்தில் உயர்ந்த கடவுள் என்றும் எழுதிவிட்டு எங்கள் மூவரையும் கூர்ந்து பார்த்தான். பின் அத்தியாயம் இரண்டில் ஜேர்மனியென்றும் மூன்றில் இனவெறியென்றும் நான்கில் அகதியென்றும் ஐந்து ஆறு ஏழு தவிர்த்து எட்டில் புத்தனென்றும் ஒன்பதில் அணுகுண்டென்றும் எழுதிவிட்டு விக்கி விக்கி சிரித்தபடியே பைத்தியக்காரர்கள் . . . பைத்தியக்காரர்கள். . . என்றான்.

நாங்கள் அடுத்த சிறையையும் வந்தடைந்துவிட்டோம். ராஸ்தாவோ ஆயாசமாய் தன் வீட்டிற்குப் போவதற்காக விமானநிலையம் வந்திருப்பதாகவே எண்ணியிருந்தான்.

ராஸ்தா எழுந்து கண்ணாடி வழியே பார்த்துவிட்டு , ஏய் . . . இது எந்த விமான நிலையம் என்று கேட்க, இது விமான நிலையம் இல்லை இன்னொரு சிறையென்றேன். கைகளை ஓங்கி பஸ்ஸின் சுவரில் குத்தினான்.
புள்ஷிட் . . . புள்ஷிட் . . . தன் காற்சட்டைப்பையில் மறுபடியும் கையை விட்டுத் தேடினான். ஒன்றும் அகப்படவில்லை.

☆ ☆ ☆ ☆

பெரும் சுற்று மதில்களைக் கொண்ட மிகப் பழைய சிறை. முன்னைய சிறைக்கும் இதற்குமுள்ள வித்தியாசங்களை மிக எளிதில் தெரிந்து கொண்டோம். இது ஹிடலர் காலத்துச் சுவடுகளில் ஒன்றாகவே இருந்தது. ஜேர்மனியின் எந்தச் சிறைகளும் இது போல இல்லை என்பது முன்அனுபவமுள்ள சல்வதோரின் கணிப்பு.

ராஸ்தாவும் நானும் தனித்தனி அறைகளில் பிரிக்கப்பட்டுவிட்டோம். நேற்றும் உருளைக்கிழங்கு, இன்றும் உருளைக்கிழங்கு, நாளையும் அதுதான். பாண் துண்டுகள், பைப் தண்ணி, நாக்குச் செத்துவிட்டது. பூட்டுவதும் திறப்பதவுமாக காவலாளிகள் இருந்தனர். பகல் வந்து, மறைந்து மறைந்து இரவுகள் மட்டுமே தெரிந்தன.

ஒவ்வொரு காலையும் ஒரு மணி நேரம் நூறு பேருக்குக் குறையாமல் சிறைக்குள் உள்ள ஒரு சிறிய நிலப்பரப்பில் ஆட்டுமந்தைகள் போல் சுற்றி நடந்தோம். அது "விடுதலை" மணித்தியாலம் என்று சொல்லப்பட்டது. ஒரு நாளின் 23 மணித்தியாலங்கள் பூட்டிய அறையில் இருந்தோம். யூகோஸ்லாவியர்கள் ஒரு குழுவாக, ருமேனியர்கள் ஒரு குழுவாக இன்னும் பஞ்சாபியர்கள், ஆபிரிக்கர்கள் என்றும் குழுக்களாக, நான் தனித்த ஒருவனாக, சுற்றி நடந்தோம். நான், ஆபிரிக்கர்களான அல்போன்ஸ், சிறி, யூனாவோடு இணைந்துகொண்டேன். ராஸ்தாவும் எங்களுடனேயே இருந்தான் . ஆனால் அவன் உயர்ந்த கடவுளரிடமும் ஆத்மாவுடனும் பேசியபடியே தனித்த ஒருவனாகவே நடந்தான்.

சிகரெட்டுக்கும், ரபாக்குக்கும் வைரக்கல்லைக் கூட மாற்றாகக் கொடுப்பதற்கு கைதிகள் தயாராகவிருந்தனர். ராஸ்தா இன்று காலை வந்ததிலிருந்து எல்லாரிடமும் ரபாக் கேட்டுப் பார்துவிட்டன். கையை விரித்துவிட்டார்கள்.

இடதுகையை இடுப்பில் வைத்தபடி, வலதுகையை உயர்த்தி சுட்டுவிரலைக் காட்டியபடி திட்டிக் கொண்டே வேகமாக நடக்கத் தொடங்கினான். குனிந்து ரபாக் அடிக்கட்டைகள் தேடிப்பார்த்தான். ஒன்றும் அகப்படவில்லை. அவை ஏற்கனவே பொறுக்கப்பட்டுவிட்டன. உரத்துத் திட்டியபடியே கைகளை வீசி, வானத்தைப் பார்த்துத் துப்பி அமெரிக்காவையும், பிரிட்டனையும், ஜேர்மனியையும் திட்டிக் கொண்டு நடந்தான்.

அல்போன்சும் நானும் ஒரு மூலையில் குந்தியிருந்தோம். அவனிடம் நான்கு அல்லது ஐந்து ரபாக்குகள் சுற்றக் கூடிய தூள்கள் மட்டுமே இருந்தன. அதில் ஒரு ரபாக்கிற்கு அளவான தூள்களை மட்டும் வெளியே எடுத்து ஒளித்து வைத்து சுற்றினான். ராஸ்தா கண்டுவிட்டு ஓடிவந்தான். அல்போனஸ் தன்னிடம் ஒன்றுமில்லாதத போல் ஒளிக்க ராஸ்தா கோபத்தோடு காவலாளிகளிடம் திரும்பி ஓடினான்.

"ஏய்! நான் உடனேயே வீட்டிற்குப் போகவேண்டும்– நைஜீரியாவிற்கு– ஓம் வீட்டிற்குப் போகவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுப்ப ஏற்பாடு செய்."

அவன் அதையே திருப்பி திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தான். காவலாளிகள் விழுந்து விழுந்து சிரித்தனர் சககைதிகளும் வேடிக்கை பார்த்தபடி அவனுக்கு கிறுக்கு என்றே பேசிக் கொண்டனர்.

அல்போன்ஸ் ஓடிச் சென்று ராஸ்தாவின் கையைப் பிடித்து குந்தியிருந்த மூலைக்குக் கூட்டிவந்து ரபாக் கருவொன்றைக் கொடுத்தான். விக்கல் சிரிப்பும் சந்தோஷமும் பொங்க கண்களைக் கூசியபடியே சூரியனைப் பார்த்தான். ரபாக் கிடைத்த பொழுதுகளில் அவன் அமைதியாகவும் சந்தோஷமாகவும் இருந்தான்.

நான் அவனிடம் அந்த ஜப்பான் விசயத்தைப் பற்றிக் கேட்டேன். அவன் குஷியாகிவிட்டான். ஜப்பானில் தனக்கு விருப்பம் இருப்பதாகவும், தனக்கு ஐந்து காதலிகள் என்றும், அதில் இரண்டுபேர் ஜப்பானிலும், ஒருத்தி ரஷ்யாவிலும், ஒருத்தி நைஜீரியாவிலும், மற்றொருத்தி அமெரிக்காவிலும் இருப்பதாகச் சொன்னான்.
அல்போன்ஸ் என்னைப் பார்த்து சிரிக்கத் தொடங்கிவிட்டான்.
ஏய்! உனக்குத்தானே அமெரிக்கா பிடிக்காதென்றேன் நான்.
ஓம் ஓம் . . . . ஆனால் . . . .
அமெரிக்க கறுப்பர்கள் மீது தனக்கு மிகுந்த மரியாதை இருப்பதாகவும் தன் காதலி ஒரு அமெரிக்க கறுப்பி என்றான்.
ஜப்பானில் உனக்கு இரண்டு காதலிகளா? என்றபடி அல்போன்ஸ் கொடுப்புக்குள் சிரித்தான்.



ராஸ்தானின் குஷி கூடிக்கொண்டே போனது. ஜப்பான் காதலிகள் பற்ற நிறையச் சொல்லத் தொடங்கிவிட்டான். நாங்கள் இருவரும் வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருந்தோம். இடையில் அல்போன்சிடம் ரபாக் கேட்க அவன் கையை விரித்தான். ராஸ்தா எழுந்து கைகளை வீசியபடி உயர்ந்த கடவுளரிடமும் ஆத்மாவிடமும் பேசியபடி நடக்கத் தொடங்கினான்.

☆ ☆ ☆ ☆

மறுநாள் காலை "விடுதலை" மணித்தியாலம் என்று எங்களுக்குச் சொல்லப்பட்ட நேரத்தில் நான், அல்போன்ஸ், சிறி, யூனா வட்டமாய் ஒரு மூலையில் இருந்து ரஸ்தாவைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். ராஸ்தா, இன்று அமைதியாகவே உயர்ந்த கடவுளரிடமும், ஆத்மாவிடமும் பேசியபடி நடந்து கொண்டிருந்தான். காரணம், யூனா தன்னிடமிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காசில் ரபாக் பக்கற்றொன்றைப் பரிசளித்தது.

ராஸ்தாவை சிரியும் கிறுக்கன் என்றே சொல்லிக்கொண்டான். நானும், அல்போன்சும், யூனாவும் மறுத்தோம்.
ராஸ்தாவைச் சுற்றி ஆறு, ஏழு பேர் நிற்க அவர்களுக்கு ரபாக் தானம் செய்து கொண்டிருந்தான். இப்ப என்ன சொல்கிறாய் என்றான் அல்போன்ஸ். சிரியோ, அவனுக்குக் கிறுக்கைத் தவிர வேறொன்றுமில்லையென்றான்.

எங்களை நோக்கி வந்த ராஸ்தா எங்களிடம் இருக்கிறதா என்று கேட்க நாங்கள் ஓமென்றோம். கையில் வைத்திருந்த ரபாக் பக்கற்றை காற்சட்டைப்பொக்கறறுக்கள் வைத்துவிட்டு இனி என்னிடமும் இல்லையாக்கும் என்றபடியே திரும்பி நடந்தவன், சில அடிகள் தள்ளி நின்று

ஏய்! ஆபிரிக்காவின் அதிகாரம் எங்களின் கையில் தான் கிடைக்கும். இருந்து பார், சிங்கின் வாழைப்பழம் கூட இந்த வெள்ளையர்களுக்கு போகவிடமாட்டேன் என்றான். சிரியால் இந்தமுறை ராஸ்தாவிற்கு கிறுக்கென்று சொல்லமுடியவில்லை. நாங்கள் குந்தியிருந்த மதில்களில் விழுந்த வெயில் தாழ்ந்து வந்துவிட்டது. மேலாடைகளைக் கழற்றி வெயில் காய்ந்து கொண்டிருந்தோம்.

அல்போன்ஸ் ஒரு ஆபிரிக்க நடன கலைஞன். உடற்பயிற்சியால் இறுகிப் போன அவன் உடல் இங்கு வந்து ஒரு மாத காலத்திற்குள் சற்று தளர்ந்து போய்விட்டது. இருந்தாலும் இந்த வெயிலில் அவன் தேகமும், முகமும் பொலிவாகவே இருந்தது. தன்னளவில் தான் சுதந்திரமாகத் திரிந்ததாகவும் விடுதலை என்றால் எப்படி இருக்கும் என்று இப்பொழுது உணருவதாகவும் சொல்லிக் கொண்டான்.

" எங்களுக்கு நண்பர்கள் இருந்தார்கள்
நாங்கள் நண்பர்களை இழந்தோம் "

என்று பாடிக்கொணடே அல்போன்ஸ் ஆடத்தொடங்கினான். அவன் மிகச் சத்தமாக மதில்களின் உயரத்திற்கு மேலால் பாடினான். உடல் வியர்த்துக் கொட்டியது. ஒவ்வொரு வியர்வை முத்துக்களிலும் ஒவ்வொரு சூரியன் தெரிந்தது.

காவலாளிகளில் ஒருவன் சத்தம் போட்டான். "ஏய்! ஆபிரிக்கானா! பாடாதே நிப்பாட்டு.
இது சிறை தெரியுமா? பாடுவது தடை செய்யப்பட்டுள்ளது."

சிரி எழுந்து நின்று சத்தம் போட்டு சிரிக்கத் தொடங்கிவிட்டான்.

"என்ன சிரிப்பதும் கூடவா?" என்றபடி காவலாளியைப் பார்த்தான்.

காவலாளி பேசாமல் இருந்து விட்டான். மறுபடியும் சிரி சத்தமாக குரலெடுத்து சிரிக்க வெளிக்கிட்டான்.

சும்மா இரு சிரி அவன் வெள்ளையன் அப்படித்தான் சொல்லுவான் என்று அல்போன்ஸ் தடுத்தான்.
அவன் வெள்ளையன் என்றால் நான் சர்வதேசக் கறுப்பன் என்றபடி அல்போனவைப் பார்த்தான்.
இல்லை அல்போன்ஸ் இவங்கள் எங்களை எப்பொழுதும் மனிசனாய் பார்த்ததில்லை. எப்படி மனிசனாய் இருக்கிறது என்பதுவும் இவங்களுக்கு மறந்துப் போச்சு. எல்லாரும் தனித்தனி "பீரோக்கிரட் " என்றபடி இருந்துவிட்டான்.

ஜேர்மனி மேல் சலிப்பும் வெறுப்பும் மீற, கம்பியாவிற்குத் திருப்பிச் செல்வதற்காக சோசல் அதிகாரியிடம் உதவி கேட்டு சென்றிருக்கிறான் சிரி. இவனிடம் பாஸ்போட் இருக்கவில்லை. சோசல் அதிகாரி பொலிஸைக் கூப்பிட பொலிஸ் வந்து பாஸ்போட் தயாராகும் வரை உள்ளே இரு என்று சொல்லிவிட்டது. அவனிடம் விசா இருந்தும் எவ்வளவு வாதாடியும் பொலிஸ் வெளியே இருந்து கம்பியாவிற்கு திரும்பிப் போக அனுமதிக்கவில்லை.

யூனாவோ லைபீரிய இராணுவம் குறித்து நடுங்கிக் கொண்டிருந்தான். இங்கு ஒரு கிராமத்தில் தனக்கு ஒரு காதலி இருந்ததாகவும், பின் பிரிந்து சென்று விட்டதாயும், அதன் பிறகு அந்தக் கிராமத்தில் ஒரு இளைஞனும் அவளைக் காதல் செய்ய வரவில்லையென்றும், பின்பு ஒருநாள் தன்னிடம் திரும்பி வந்துவிட்டதாயும், அவளின் மேல் தனக்கு மிகுந்த காதல் இன்றளவில் இருப்பதாயும், இந்த இரண்டு காரணங்களிற்காகவும் தான் வழக்கறிஞர் மூலம் வாதாடி இங்கேயே இருந்துவிடப் போவதாகவும் சொன்னான்.

அல்போன்சும், சிரியும் யூனாவைப் பார்த்து சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.
யூனா நீ இன்னும் திருந்தவில்லையா? இனியும் இங்கு இருக்க விரும்புகிறாயா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் லைபீரியாவிற்கு போகமுடியாது. போனால் செத்து விடுவேன் என்றான் யூனா.
வேண்டாம் நீ ஐவரிக்கோஸ்ற்ருக்கு வா என்றான் அல்போன்ஸ்.

'அதெப்படி முடியும்' என்றான் யூனா.

அதெப்படியோ ஆனால் இங்கு மட்டும் தொடர்ந்து இருக்க நினைக்காதே. உன்னை அழிக்க நினைக்காதே என்றான் சிறி.
நானும் முழி பிதுங்க இவர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.
அல்போன்ஸ் என்னைப் பார்த்து சிரித்தபடியே நீ என்ன சொல்கிறாய் என்றான். நான் யூனாவை ஒரு கண்ணால் பார்த்துக் கொண்டு எனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்கு சென்றால், என் கடைசித் தம்பி விளையாட்டாகவே சுட்டுவிடுவான் என்றும் இலங்கை இராணுவம் குறித்து நடுக்கம் என்றும் இருந்தாலும் வீட்டிற்குப் போக கொள்ளை ஆசையென்றும் சொன்னேன். நான் இலங்கைக்குப் போவது ஆபத்தென்றும் இங்கேயே இருக்கவேண்டுமென்றும் வாதாடினான் யூனா.


அல்போன்சும் சிறியும் யூனா என்னைக் கெடுப்பதாக சொன்னார்கள். இலங்கைக்குப் போய் விடுவது தான் எனக்கு நிறைவு தரும் என்றும் சொன்னார்கள்.

அமைதியாக நடந்து கொண்டிருந்த ராஸ்தாவை அல்போன்ஸ் கூப்பிட்டு இது குறித்துச் சொல்லி அபிப்பிராயம் கேட்டான்.
This guyes are crazy. Fucking Germans. I want to go Home.என்றபடி ராஸ்தா உயர்ந்த கடவுளரிடமும் ஆத்மாவிடனும் பேசியபடி மீண்டும் நடக்கத் தொடங்கினான்.

உருளைக்கிழங்கின் மேல் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. பகலில் தூங்குவதும் வழக்கமாகிவிட்டது. விழித்திருந்து கற்பனை செய்வதைவிட தூங்குவதும் நல்லதாகப்பட்டது. தூங்கினால் கனவுகளும் தூக்கத்தைக் கெடுத்துவிடுகின்றன. கனவுகளிடமிருந்து தப்பித்துக் கொண்டிருந்தால் இந்தக் காவலாளிகள் கதவைத் திறந்து பூட்டும் இடியோசையும், அருகிலுள்ள சேச்சின் மணியொலியும் கெடுத்துவிடுகின்றன.

தொடர்ந்து கட்டிலில் தூங்குவதும், தூங்கமுடியாமல் படுத்திருப்பதாலும், உடல்முழுக்க வலி ஏற்பட்டது. எனக்கு வியர்த்துக் கொட்டவேண்டும். உடல் இலேசாக வேண்டும். ஒரு மாற்றத்திற்காக உடற்பயிற்சி செய்யத்தொடங்கினேன்.

நாளின் ஒரு மணிநேரம் தவிர மீதியை இந்த மூன்று கிழமைகளும் தனித்தே கழித்துவிட்டேன். நேற்று சர்வதோரை வந்தது நாளின் நீட்சியைக் குறைத்துவிட்டது. இரட்டையடுக்குக் கட்டிலில் எனக்கு மேல் படுக்கை. அவனுக்கு கீழ் படுக்கை. என் படுக்கையோரம் ஜன்னல். இதிலிருந்து சுற்று மதிலைத் தாண்டி வெளியே பார்த்தால், மரங்களின் உச்சியும், சேச்சின் கோபுரம், கோபுரத்தின் மேல் யேசுவின் சிலுவையும், சிலுவையின் உச்சியில் ஒரு கோழியும் தெரியும். சேச்சின் பக்கமாக நகரின் வேலைவாய்ப்பு அலுவலகம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோபுரத்தின் உச்சியைப் பார்க்கும் போதெல்லாம் அந்தக் கோழியின் மேல் கேள்வியும், பரிதாபமும் ஏற்பட்டது. என்னைப் போல் பகலில் தூங்கமுடியாது, தூங்குவது போல் பாசாங்கை வரவழைத்து, பிரண்டு பிரண்டு படுத்திருந்த சல்வதோரையைத் தட்டினேன்.

ஏய்! அந்தக் கோழியைப் பார்த்தாயா?
கோழியா! எங்கே என்று திடுக்கிட்டு எழும்பினான்.
நான் கொபுரத்தின் உச்சியைக் காட்டினேன்.
அதுவா . . . நானும் ஏதோ உண்மைக் கோழி என்று நினைத்துவிட்டேன். மக்டொனாலிலிருந்து தப்பி வந்திருக்கும் என்று விட்டு திரும்பிப் படுத்துவிட்டான். நான் என் படுக்கையிலிருந்தபடியே அநதக் கோழியையே பார்த்துக் கொண்டிருந்தேன். கொஞ்சம் மாறுதலுக்காக திரும்பினால் வானம் தெரியும்.

சேச்மணி ஒலிக்கத் தொடங்கியது. குறைந்தது பத்து நிமிடங்களாவது இந்த ஒலியைச் சகித்தாக வேணடும். சர்வதோரை " இது வேற சனியன் " என்றபடி கட்டிலை விட்டு எழும்பி இந்தச் சிறிய அறைக்குள் மாறிமாறி நடக்கத் தொடங்கிவிட்டான்.

நான் அந்தக் கோழியைப் பார்த்தபடியே இருந்தேன். என்ன கோழி பறந்துவிட்டதா? இருக்கிறதா? என்றான் சல்வதோரை.
நான், அது அங்கேயே நிற்கிறதென்றேன்.
ஏய் அந்தக் கோழியும் என்னைப் போல் தஞ்சம் கேட்டிருக்குமா? பார் அதற்கு சிறகுகளைக்கூட காணவில்லை. அந்தரத்தில் வேறு நிற்கிறது. அதை இறக்கிவிட்டால் என்ன என்றபடி சல்வதோரைமிடம் திரும்பினேன். நடந்து கொண்டிருந்தவன், யன்னலோரம் வந்து என்னையும் கோழியையும் மாறிமாறிப் பார்த்துச் சிரித்தான். ஓரத்திலிருந்த கதிரையை இழுத்துப்போட்டு இருந்தான். கடுமையான யோசனை செய்பவன் போலத் தோன்றினான்.

சேச்மணி இன்னமும் ஒலித்துக்கொண்டிருந்தது.
அவன் மறுபடியும் எழும்பி மாறிமாறி நடந்தான்.
டாண் டாண் . . . . டாண் டாண் என்று அவனும் ஒலி எழுப்பியபடியே மணியொலிகேற்றவாறு வலது தோளையும் இடதுதோளையும் அசைத்தபடி நடந்தான். ஹிட்லர் என்று நீட்டிக கத்தினான். மறுபடியும் டாண் டாண் . . . டாண் டாண் என்றபடி எனக்கு கிட்ட வந்து கையைக் காட்டி சிரித்தபடியே மணியோசையுடன் கத்தினான்.

அவனால் ஒரு இடத்தில் நிற்க முடியவில்லை. அங்கும் இங்கும் நடப்பதாகவும் புகைப்பதாகவும் இருந்தான். நானும் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். மூன்று குழந்தைகள், மனைவி இருபத்தைந்து வருடமாக ஜேர்மனியில் இருப்பதாகவும் ஒரு திருட்டுக் குற்றத்திற்காக பத்தொன்பது மாதங்களாக பன்னிரண்டு வருடங்களிற்கு முன்பு கைதியாக இருந்ததன் பேரில் இந்த நாடு கடத்தலென்றும், இனி ஆறு வருடங்களிற்குள் ஜேர்மனிக்குள் நுழைய முடியாதென்றும் சொன்னான்.

இத்தாலிக்குப் போனால் என்ன செய்யப் போகிறாய் குடும்பம் என்ன மாதிரி, திரும்பி வருவாயா எனக் கேட்டேன்.
இல்லையென்றும் தன் மனைவி ஹொலண்டைச் சேர்ந்தவளென்றும் அங்கு குடியேறவிருப்பதாகவும் சொன்னான்.

அந்தத் திருட்டு விசயத்தைப் பற்றி கேட்க எனக்கு விருப்பமாகவிருந்தது. கோபித்துக் கொள்வானோ என ஒரு தடவை யோசித்தேன். இருந்தாலும் கேட்டேன். அவன் அதைப் பற்றி உற்சாகமாகவே சொன்னான்.

ஒரு மில்லியன் பெறுமதியான சுவர்க்கடிகாரம் என்றும், அப்படி உலகத்தில் நான்கைந்துதான் இருக்குமென்றும் அதுவொரு பணக்காரன் வீட்டில் இருந்ததென்றும் அது அவனுக்கு எதுக்கென்றும், தான் திருடி இருநூற்றியம்பது ஆயிரம் மார்க்குகளுக்கு ஒரு யூதனுக்கு விற்றுவிட்டதாகவும், அப்பணத்தில் தான் கோட் செலவுகள் செய்ததாகவும், மீதியில் ஹொலண்டில் வீடு வாங்கியதாகவும் சொன்னான்.

பகிடி தெரியுமா? நான் திருடியதாக கோட்டால் நிரூபிக்க முடியவில்லை என்றான் சிரித்தபடியே சல்வதோரை.
திருடனென்று நிரூபிக்காமலா பத்தொன்பது மாதங்கள் சிறையிலிருந்தாய் எனக் கேட்க, அதை விடு பணம் கிடைத்ததே என்றான்.

☆ ☆ ☆ ☆

மாலை ஒன்பது மணியைத் தாண்டி விட்டது. வெயில் இன்னும் தாழவில்லை. நானும் சல்வதோரையும் பேசிக்கொண்டிருந்தோம். பக்கத்து அறைக்கதவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதைந்து சத்தம் கேட்டது. அதில் அல்போன்சும் சிரியும் இருந்தார்கள். காலையில் அல்போன்ஸ் தனக்கு உடம்பு சரியில்லையென்றது ஞாபகம் வந்தது.

கதவு தொடர்ந்து தட்டப்பட்டுக்கொண்டிருந்தது. காவலாளி வந்து என்ன வேண்டும் உங்களுக்கு என்று கத்தினான். டொக்டரைக் கூப்பிடு, அல்போன்சுக்கு நெஞ்சுவலி கதவைத்திற என்று சிரி கத்தினான்.
. . . . இப்பமுடியாது ஜன்னலைத் திறந்துவிட்டு படு. காலையில் விண்ணப்பம் எழுதிக் கொடு என்று விட்டு காவலாளி போய்விட்டான்.

இன்றைக்குச் செத்துப் போ. நாளைக்கு விண்ணப்பம் எழுது. விண்ணப்பம் தெரியுமா விண்ணப்பம் என்று எனக்குச் சொன்னபடியே சிரி கதவருகில் போய் நின்றான். குரலைச் செருமி காவலாளிகளின் தடித்த குரலை தனக்கும் வரவழைத்தபடி, என்ன! என்ன வேண்டும் உனக்கு! முடியாது . . . இப்ப இல்லை நாளைக்கு . . . ஓம் நாளைக்கு விண்ணப்பம் எழுதுவென்று திருப்பித்திருப்பிச் சொல்லிச் சிரித்தக்கொண்டிருந்தான்.

விண்ணப்பம் எழுதி எழுதி நாங்கள் ஓய்ந்து போனோம். தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் என்பதற்கிணங்க நாங்கள் தட்டிக்கொண்டும கேட்டுக்கொண்டும் இருந்தோம். திறக்கப்பட்டதா கொடுக்கப்பட்டதா என்பது செத்துப் போன யேசுவிற்கு தெரிய நியாயமில்லை. நாங்கள் தேடிக்கொண்டு மட்டும் இருந்தோம். சல்வதோரைக்கு ஹிட்லரைக் கண்டுபிடிக்க இருப்பத்தைந்து வருடங்கள் எடுத்துவிட்டன.


☆ ☆ ☆ ☆

அம்மா சூரியன், அப்பா நிலவு
நாங்கள் வெயிலின் குழந்தைகளாகப் பிறந்தோம்
குளிரில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம்
குளிர் நிலத்தின் வெயில் காலமொன்றில் கைதிகளாக்கப்பட்டோம்.
எங்கள் தோலின் நிறம் வெள்ளை அல்ல என்பதை ஐரோப்பாவை நாங்கள் கண்டுபிடித்த பின்னர் தான் உணர்ந்துகொண்டோம்.
எங்களை சமுத்திரத்திலும், நிலத்திலும் தேசங்கள் தாண்டி தேசங்களுக்கு வீசி எறியவும் ஐரோப்பியர்களின் கண்டுபிடிப்புகள் அவர்களுக்காகவே உதவின என்பதையும் கண்டுபிடித்தோம்.
கொலம்பஸின் வாரிசுகள் உலகத்தின் தரித்திரங்களென்றும், ஐரோப்பாவையும் ஐரோப்பியரையும், ஹிட்லரையும், ஹிட்லரின் ஜேர்மனியையும் ஜேர்மனியரையும் பிரித்துப் பிரித்து கண்டுபிடித்தோம்.
எங்களின் செல்வங்கள், எங்களின் கோதுமை, எங்களின் அரிசி, எங்களின் ஆடைகள், எங்களின் உழைப்பு எல்லாம் கொள்ளை கொண்டு மலையாய் ஐரோப்பாவில் குவித்து வைத்ததையும் கண்டுபிடித்தோம்.

குறிப்புகள்:

ராஸ்தா, அல்போன்ஸ், சிரி எல்லோரும் வீட்டிற்குப் போகிறார்கள். நானும் யூனாவும் ஒரு வீட்டில் வாழ்வது எப்படி என்று கற்றுக்கொண்டோம். ஆனால் அதற்கு வீடுதான் இல்லை! எங்களுக்கு முன்பு வீடுகள் இருந்தன. ராஸ்தாவைப் போல் உயர்ந்த கடவுளிடமும், ஆத்மாவிடமும் வாய்விட்டு பேசும் வாய்ப்பை எங்கள் வீடுகள் இழந்தன.

☆ ரவி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

( "சிந்தனை 1/93" இதழில் ஸ்பாட்டகிஸ்ட்தாசன், இலக்கியச்சந்திப்பு பற்றி எழுதிய 'அவசர மடல்' மற்றும் "எண்ணங்கள்" பகுதியில் பாரதிதாசன் எழுதிய குறிப்புக்கள் ஆகியவற்றிற்கு, "சிந்தனை 2/93 " இதழில் ப.வி.சிறிரங்கன் தமது பதில்களை எழுதினார். அவற்றிற்கு பாரதிதாசன், ஸ்பாட்டக்கிஸ்ட்தாசன் எழுதிய பதில்களும் அவற்றிற்கு ப.வி.சிறிரங்கன் எழுதிய குறிப்புக்களும் இங்கு பிரசுரமாகின்றன.)

## மீண்டும் ஒரு அவசர மடல்!

அன்பு நண்ப,

எனது மடல் உனது செவிகட்கு எட்டியதையிட்டு மகிழ்ச்சி. இரவிரவாக விவாதம் செய்த நாட்கள் நினைவில் வந்தன.


சுயாதீன சமூகம் என நான் எந்தவித அடைமொழியும் இல்லாமல் எழுதியதன் தவறை உணர்கிறேன். உண்மையில் சுயாதீன சமூகம் ஓரளவு சுயாதீனம் உள்ளது என்பதுதான் எனது வாதம். ஆனால் நீர் குறிப்பிட்டபடி நாம் முழுக்க முழுக்க இச் சமூக அமைப்பினால் மீள முடியாமல் பின்னிப் பிணைக்கப் பட்டவர்கள் அல்ல. நாம் தனிய ஆட்டிவிக்கப் படுபவர்கள் மட்டும்தான் என நாம் எடுத்துக் கொண்டால் எமக்கு கடவுள்தான் உதவ வேண்டும், அவர் எங்கே இருக்கிறார் என எனக்குத் தெரியாது.

சமூகஅமைப்பும் மனிதனை உருவாக்கிறது, மனிதனும் சமூகஅமைப்பை உருவாக்குகிறான் என்பதுதான் எனது கொள்கை.

"நாம் மீட்பர்கள் அல்ல" என்று குறிப்பிட்டிருந்தாய், ஆம். அதனால்தான் "சுயாதீன சமூகத்தின் " முக்கியத்துவத்தை உணர்கிறேன், மாறாக உனது வேலைத் திட்டங்கள் பற்றிய கோட்பாட்டில் தான் "மீட்பர்கள்" மறைந்திருக்கிறார்கள் என்பதை அறிவாயா?

மற்றும் உயிர்ப்பு – தூண்டில் – மனிதம் – சமர் இதழ்களில் நடைபெறும் விவாதம் பற்றி கூறியிருந்தாய். இவை நல்ல விவாதங்கள்தான். ஆனால் ஒரு சிறு கவலை. இவர்கள் எல்லோரும் நாம்பன் மாட்டில் பால் கறக்க முயற்சிக்கிறார்கள். இவை பற்றிப் பின்.

**பாரதிதாசன்**




## இலக்கியச்சந்திப்பு பற்றி ...............

இலக்கியச்சந்திப்பு பற்றிய எனது 'அவசர மடலுக்கு' ( சிந்தனை 1/93) ப.வி.சிறிரங்கனின் 'ஆத்திர மடல்' கண்டேன். திமிர், அகங்காரம் என்று என்னை நன்றாகவே சாடியுள்ளார். எனது ( அவர் குறிப்பிட்டபடி) சிறுபிள்ளைத்தனத்திற்கு பெரியவரிடம் நன்றாகவே வாங்கிக் கட்டியுள்ளேன்.

உண்மையில் இலக்கியச்சந்திப்புப் பற்றி விமர்சனத்துடன் கூடிய ஒரு கட்டுரையை எழுதவே எண்ணியிருந்தேன். அதற்கான தேவையும் இருந்தது. துர்அதிர்ஷ்டவசமாக நேரமின்மையாலும், இலக்கியச்சந்திப்பின் அழிவை வேண்டியவர்களின் தூற்றல் அதிகரித்தமையாலும் ஒரு அவசர மடலுடன் நிறுத்திக் கொண்டேன். குறிப்பிட்ட அந்த நோக்கத்திற்காக எழுதப்பட்ட ஒரு சிலேடை மடல் என்பதால் இலக்கியச்சந்திப்பின் மீது இருந்த எனது விமர்சனத்தை குறைத்துக் கொண்டேன். (இது பிழையாக இருக்கலாம்) இருந்தும் இலக்கியச்சந்திப்புக்கு உள்ளிருந்து வரும் ஆபத்தையும், அதனுள் இருப்பவர்களின் பிழையான கூட்டு மனப்பான்மையையும் குறிப்பிட்டிருந்தேன். நண்பர் அவதானமாக வாசித்திருந்தால் விளங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் பிழையாக விளங்கிக் கொள்வதின் மறு பெயர்தான் ப.வி.சிறிரங்கன் என்பது எனது கஷ்ட காலம்.

இன்னும் ஒன்று எனது மடல் 'சிந்தனை'யில் அச்சாகும் போது சற்று பிழை ஏற்பட்ட விட்டது. "தலைமைத்துவம் இல்லாமல்(?) என கேள்விக் குறியிட்டிருந்தேன், அச்சாகும் போது (!) விழிப்புக் குறியுடன் அச்சாகிவிட்டது.

மற்றும்படி நாங்கள் எல்லோரும் ஆரம்பத்தில் இருந்து இலக்கியச்சந்திப்பு என்ற கப்பலில் நன்றாகப் பிரயாணம் செய்தவர்கள்தான். தமது பாதையில் போகாததால் சிலரும், பிழையான பாதையில் போவதாக சிலரும், தமக்கு இது சரிவராது என சிலரும், தனிப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனஸ்தாபத்தால் சிலரும் இடையிடையே வெளியில் பாய்ந்து விட்டனர். ( தப்பித்துக் கொண்டனர்?) முடிந்தவரை முயற்சிப்போம் என எண்ணியவர்களில் நானும் ஒருவன். தவறுகள் ஏற்பட ஏற்பட விலகி ஓடுவதே எமது கொள்கையாகக் கொண்டால், நாம் எமது தூய்மை வாதத்தை மாத்திரம்தான் காப்பாற்றிக் கொள்ளலாம்.
தூக்கிப்பிடிப்பதும், போட்டு உடைப்பதும் இலகுவானதுதான். இவை இரண்டிற்கும் இடையிலும் ஒரு பாதை இருக்க முடியுமல்லவா?

நண்ப, நீ நம்பினால் நம்பு. நம்பிக்கைகள் நூலிடையில் தொங்கும் இந்நாட்களில், கூட்டு முயற்சிகள் எல்லாம் குலைந்து அழியும் இந்நாட்களில், உள்ளதைக் காப்பாற்றிக் கொள்வதும் முக்கியமானது......... பிழையானதைக் காப்பாற்றுவதும் ஆபத்து என்பது உனது வாதம். உண்மைதான். உள்ளிருந்து போராடுவது நல்லது என்பது எனது வாதம். இனி இலக்கிச்சந்திப்பு பற்றி வருவோம்.
இலக்கியச்சந்திப்புக்கு தலைமை இல்லாமல் இருந்தது என்னவோ உண்மைதான். தற்போது என்னவோ கண்ணிற்குப் புலப்படாத மத்திய குழு ஒன்று இயங்கி வருகிறது போல தெரிகிறது. அதுவுமல்லால் ஆரம்பத்தில இருந்த குறி கோள்கள் அற்று anything goes என்றாகிவிட்டது. நான் சொல்வதுதான் காவியம் என்னும் சிறு சிறு கைலாசபதிகள், சிவத்தம்பிகள் மற்றும் சில கோவில் திருவிழாக்காரர்கள். இப்படிப் பல் வேறு பிரச்சனைகள். ஆனால் நண்பா, இப்போ என்னவோ "சும்மா இருப்பவர்களின் காலந்தான்" அவர்களால்தான் கையில் கறைபடாமல் விமர்சிக்க முடியும்: இலக்கிச்சந்திப்புக்குள் ஒரு புரட்சி தேவையென்பது உண்மையானது. அதைச் செய்ய உன்னையும் அழைக்கிறேன்.

இப்படிக்கு

ஸ்பாட்டக்கிஸட் தாசன்

பி.கு. "அறிவொளி இயக்கத்தின் வெளிப்பாடு......... நக்கீரர்களின் கூட்டு ...... " என்பதிலுள்ள மிகைப்படுத்தலை நான் உணர்கிறேன். ஆனால் அப்படி ஆவது எனது அவா!

# சில குறிப்புக்கள்!!

அன்புள்ள ஆசிரியருக்கு,

....... எழுதிவிட நினைக்கிறேன். இருந்தும் என்னத்தை எழுதிவிட? சும்மா, சும்மா என்றாகிறது யாவும். பாரதிதாசனின் இலக்கியச்சந்திப்புப் பற்றிய மீள் கருத்திலும் எனக்கு உடன்பாடில்லை. அவர் தரும் சிலேடைக்கு. "நான் பூங்குன்றனாரோ அவர் காளமேகமோ இல்லை, எனவே, அது பற்றிய அவரது கருத்துக்கு என் கருத்து அவசியமில்லை.
மேலும் சுயாதீன சமூகம் பற்றிய அவர் எண்ணத்துக்கு சிறு கருத்தை முன் வைக்கலாமென கருதுகிறேன்.

.......... Civil Society என்ற ஆங்கிலப் பதத்திற்கு தமிழ் சமூகவியலாளர்கள் சுயாதீன சமூகம் என்று ஏனோ தமிழ் ஆக்கம் செய்து விட்டனர். அது இப்போ பெரியதொரு பொருள் மாறாட்டத்தைச் செய்கிறது. Indepependent + Society க்கும் Civil society க்கும் வித்தியாசமுண்டு. Independent தாம் சுயாதீனமாகும்.
இப்போ சுயாதீனமென்ற தமிழ் வார்த்தையின் பொருள் மனதில் எதற்கும் கட்டுப்படாத/ஆதிக்கமற்ற நிலையைத் தோற்றுவிக்கிறது. இவ்வுணர்வுடன் "சுயாதீனச் சமூகம்" பற்றிப் பார்த்தால் அப்படியொரு அமைப்பு பூமியில் இன்றில்லை. மாறாக Civil society தாம் (மக்கள் அமைப்பு) உண்டு. இனி விடயத்திற்கு வருகிறேன்.

சுயாதீனம். சமூகம். என்றால் என்ன?
சுயாதீனம் முழுக்க முழுக்க எதற்கும் கட்டுப்படாத/எவ்வகை ஆதிக்கதிதிற்கும் உட்படாத நிலைதானே?
சமூகம் என்றால் ? ஒரு குறிப்பிட்ட சனக் கூட்டை சமூகம் என்கிறோமா அல்லது ஒருவித மனிதக் கூட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக ஒழுங்கு முறைகளைச் சமூகம் என்கிறோமா?

இதற்கு, ஒருவித சமூக ஒழுங்கு முறைகள் ஒருவகை மனிதக் கூட்டை மையப் படுத்தி அவரகளின் உழைப்பையும், பூமியின் மூலதனங்களையும் குவிப்பதற்காக ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்டு அதன்படி இயங்கும் போக்கை சமூகம் என்கிறோம்.

இவ்விதத்தில் பார்த்தால் ஐரோப்பிய கண்டத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதியாய் வாழும் நாமும், ஐரோப்பிய முற்போக்கு சக்திகளும் சுயாதீனமாக இயங்குகிறார்கள் என்பது போய்ப் பித்தலாட்டம். எனவே, மன அளவில் சுயாதீன உணர்வை முன் வைத்து அதற்காக கனவு கண்டு, ஒத்த கருத்துள்ளவர்கள் ஒன்றாகி பேசி....... கதைத்து....... விவாதித்து ஒரு இலட்சியத்திற்காக இயங்கலாம். ஆனால் இது சுயாதீனமல்ல. "மனிதன் சமூக அமைப்பை உருவாக்குவதும், சமூக அமைப்பு மனிதனை உருவாக்குவதும்" சுயாதீனமாகிவிடாது.

எனினும், இன்றைய முதலாளித்துவ சமூகம் பெரும் திரளான பொதுமக்களின் நடவடிக்கையை முற்றாக நிறுத்திவிட முடியாதுதான்.
வரலாறு புறநிலையான விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது என்பதை ஏற்கின்ற ஒருவர், மனிதனுடைய "உணர்வு பூர்வமான" நடவடிக்கையையும் ஏற்க முடியுமா? அதாவது, சுதந்திரமான உணர்வு நடவடிக்கை. ஆம்! முடியும். வரலாற்றின் புறநிலையான விதிகள் மனித நடவடிக்கையை நிர்வகிக்கின்ற நிலையில் உள்ளது. எனினும், அதை பெரும் திரளான மக்கள், சமூகவர்க்கங்களின் இயக்கத்திற்கு வெளியில் செயலாற்ற முடியாது. இதனால், மக்களும் வரலாற்று விதிகளை அறிந்து கொள்வதில் வழிகாட்டிகளை, ( மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் இப்படிப் பலரை) பெற்றால் அவர்கள் உணர்வு பூர்வமாகவும் சுதந்திரமாகவும் வரலாற்றைப் படைக்க முடியும். ஆனால், இது சுயாதீனமல்ல. அதாவது சுயாதீனச்சமூகமாக இயங்கவில்லை.
பாரதிதாசன் சொல்கிறார், நான் இச்சமூக அமைப்பால் முற்று முழுதாக மனிதன் பின்னிப் பிணைக்கப்பட்டவன் என்னும் அர்த்தத்தில் எழுதுவதாகவும் இப்படியானால், கடவுள் தான் எமக்கு உதவ வேண்டும் என்றும் சொல்கிறார்.

புறநிலையான விதிகள் முன் கூட்டி நிர்ணயிக்கப்பட்ட முறையில் செயற்படுகிறது என்று நான் குறிப்பிட்டால் அவர் கருத்துச் சரி. ஆனால் புறநிலையான விதிகள் செயற்பட சமூகச் சக்திகளின் நடவடிக்கை அவசியம். இதை வைத்துக் கொண்டு நாம் சுயாதீனச் சமூகம் இருக்கின்றது என்ற முடிவிற்கு வரமுடியாது. அதாவது, வரலாற்றுத் தன்னியல்பு உற்பத்திச் சாதனங்களின் தனியுடமையாலும் எதிரான வர்க்க நலன்களாலும் ஏற்படுவதாலும் இதற்கு மாறாக உணர்வு பூர்வமான வரலாற்று நடவடிக்கை ( சுதந்திரமான நடவடிக்கை ) உற்பத்திச் சாதனங்களின் சமூக உடமை மற்றும் சமூக ஒற்றுமை - உறவுகளை அடிப்படையாகக் கொள்வதாலும் சுயாதீன சமூகம் இருக்கின்றது என்று நாம் எழுத முடியாது. ஏனெனில், நாம் ஆளும் வர்க்கத்துடன் இணைந்து அவர்களுக்காக பொருள் உற்பத்தி செய்யும் போதும், அவர்களின் ஒழுங்கு முறைகளுக்குள் காரியமாற்றும் போதும் சுயாதீனம் என்ற பேச்சுக்கே இடமில்லை.
நான் நினைக்கின்றேன் பாரதிதாசன் மேற்காட்டிய விதிகளின்படி புரட்சிக்குப் பணிபுரியும் சமூக இயக்கங்கள் - சக்திகள் மற்றும் இன்ன பிற சக்திகளை "சுயாதீனச் சமூகம்" என்று எண்ணுகிறார் போல் தெரிகிறது. ஆனால் இவை யாவும் சுயாதீனமுடையவையல்ல என்பது என் தாழ்மையான கருத்து. அவ்வளவு தாம்.
இறுதியாக, உயிர்ப்பு - மனிதம் - தூண்டில் - சமர் போன்ற இதழ்களில் நடைபெறும் விவாதம் " நாம்பன் மாட்டில் பால் கறக்கத்தான்" என்கிறார். நான் என்ன செய்ய? வாதத்திற்கு மருந்துண்டு ஆனால் பிடிவாதத்திற்கு........?

ப.வி.சிறிரங்கன்


**பெண்கள்சந்திப்பு மலர்**
**1993**

**வெளியீடு 3**

**விலை 7 டி.எம்.**
தபாற்செலவு 1.50 டி.எம்.

தொடர்புகளுக்கு:

" Penkalchanthippu"
Frauen forum
Information Zentrum Dritte Welt
Overweg str. 31
44625 Herne
Germany




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ''ஜே.ஆரி''ன் முதிசம்.



'யங்கி டிக்கி' – அதுதான் ஜே.ஆர்.ஜயவர்த்தனா 1977ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைத் தோற்கடித்துப் பதவிக்கு வந்த போது இரண்டு பிரச்சனைகளைத் தான் தீர்க்கப் போவதாகக் கூறினார். ஒன்று நாட்டின் பொருளாதாரப் பிரச்சனை மற்றது தமிழர்களின் பிரச்சனைகள். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாதாரக் கொள்ளைகள் நாட்டை வங்குரோத்து நிலமைக்குக் கொண்டு வந்து விட்டதால் தனது திறந்த பொருளாதாரக் கொள்கைகளினால் இலங்கையை ஒரு சிங்கப்பூர் ஆக்கப் போகிறேன் என்றார். தமிழர்களுக்குப் பிரச்சனைகள் உள்ளதால் அவற்றைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்தார்!

ஆனால் ஜே.ஆரும் அவரின் வாரிசுகளும் பதினைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்த பின், நாட்டின் பொருளாதாரம் சிலரைப் பொறுத்தவரை சிங்கப்பூராகியதோ என்னவோ, நாட்டின் பெரும் பகுதி சோமாலியாவாகும் அறிகுறிகளே தென்படுகின்றன. மறுபுறத்தில் தமிழர்களைப் பொறுத்தவரை 1977க்கு முன் இருந்த நிலை மீண்டும் வந்தாலே போதும் என்ற நிலைக்கு இன்று வந்துள்ளார்கள். இந்தப் பதினைந்து வருடங்களின் வரலாறு தமிழ் மக்களின் இரத்தத்தினாலேயே எழுதப் பட்டுள்ளது என்றால் மிகையாகாது. இந்த அரசாங்கம் 1977ல் இருந்து கடைப்பிடித்து வந்த திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும் இனப்பிரச்சனைக்கு முன்வைத்த தீர்வுகளுக்குமிடையிலான முரண்பாடுகளை சிறிது ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

1970களிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அமுல் நடத்தப்பட்ட தேசிய மயமாக்கும் கொள்கை, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், உள்நாட்டு உற்பத்தி மற்றும் கூட்டுறவு ஆகியவற்றை ஊக்குவித்தல் என்பன தரகு முதலாளிகளையும் உயர்மட்ட மத்தியதரவர்க்கத்தினரையும் பாதித்த வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி தனது திறந்த பொருளாதாரக் கொள்கைகளை முன்வைத்து, 1977 தேர்தலில் வெற்றியீட்டியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் 1970ல் இருந்து கடைப்பிடித்து வந்த இனவாதக் கொள்கைகள், கல்வியில் தரப்படுத்தல், தனிச் சிங்களத்தினை அமுல் நடத்தி அரச உத்தியோகங்களில் தமிழர்களைப் புறக்கணித்தல் போன்ற நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தேசிய இனப் பிரச்சனைக்கு முழுமையான தீர்வு காணத் தவறியமை ஆகியவை தமிழ் மக்களை ஒரு விரக்தி நிலைக்கு இட்டுச் சென்றது.

இதனைப் பாவித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையைப் முன்வைத்து, 1977 தேர்தலில் பெரும் வெற்றியை ஈட்டினர். தமிழர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைக் கூட்டணியினரின் இந்த வெற்றியானது அதனை இலங்கையின் பாராளுமன்றத்தினுள் இரண்டாவது பெரிய கட்சியாக்கியது. இது தென் இலங்கை சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவு 1977ல் தமிழர்கள் தாக்கப்பட்டதாகும்.

இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பெரிதும் பாதிக்கப் பட்ட போதும், தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக் கட்சி தனது திறந்தபொருளாதாரக் கொள்கைகளை அமுல் நடத்த ஆரம்பித்த போது தனது குரலை அடக்கி வாசிக்க ஆரம்பித்தது. திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் கட்டுபாடற்ற இறக்குமதி ஏற்றுமதிகள், தனியார் கம்பனிகளுக்கும் வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் இன்னும் பல வகையான நன்மைகள் எல்லாம் தமிழ் முதலாளிகளுக்கும் கிடைத்ததும், இன்னும் கிடைக்கும் என்ற எதிர் பார்ப்புகளும் தமிழர் கூட்டணியை மௌனமாக்கிய முக்கிய காரணிகளில் ஒன்று. தமிழ்த் தரகு முதலாளிகளின் தேவைகளுக்கும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்குமிடையிலான முரண்பாட்டையே இது காட்டியது. மக்களின் ஆதரவைப் பெற தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த கூட்டணியினர் தமது மேல் தட்டு ஆதரவாளர்களின் நலன்களையும் புறக்கணிக்க முடியவில்லை.

மறுபுறத்தில் சகலருக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடிக்க ஆரம்பித்த ஜே.ஆர் அரசாங்கம், தமிழ் முதலாளிகளை ஒதுக்கவும் முடியவில்லை. இந்த நடைமுறை, ஐக்கிய தேசியக் கடசியின் அடிப்படை பேரினவாதக் கொள்கையுடன் முரணபட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காலத்தில் கட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வந்த இறக்குமதி ஏற்றுமதிக் "கோட்டா"க்கள், கூட்டுத்தாபனங்களினால் பெற்ற சலுகைகள், மக்கள் வங்கி முதலியவற்றினால் பெற்ற பிரத்தியோகமான சலுகைகள் ஆகியவற்றை, சிங்கள முதலாளிகள், திறந்த பொருளாதாரத்தில் தமிழ் முதலாளிகளுடன் போட்டியிட்டே பெற வேண்டியேற்பட்டது. பல தனியார் வங்கிகள் தமிழர்களின் கட்டுபாட்டிலேயே இயங்கின.

திறந்த பொருளாதாரம் தமிழ் முதலாளிகளுக்கும் சிங்கள முதலாளிகளுக்கும் இடையிலேற்படுத்திய இந்த முரண்பாடுகளை, 1983 கறுப்பு ஜூலையில் தமிழ் முதலாளிகளின் ஸ்தாபனங்களுக்கு எதிரான தாக்குதல் எடுத்துக் காட்டியது. அறுபதிற்கும் மேற்பட்ட தமிழ் முதலாளிகளுக்குச் சொந்தமான தொழில் ஸ்தாபனங்கள் 1983 இனப்படு கொலைகளின் போது தாக்கப்பட்டன. திறந்த பொருளாதாரம் பேரினவாதத்திற்கு மேலும் தூபம் போட்டு எரிக்கவே உதவியது.

அதே வேளையில் 1983 குழப்பங்கள் திறந்த பொருளாதாரக் கொள்கைகளை பெரிதும் பாதித்தன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள், உல்லாசப் பிரயாணிகள் எல்லோரையும் இந்தக் கலவரங்கள் விரட்டியடித்தன. சாணேற முழம் சறுக்கும் தனது கொள்கைகளுடன் ஜே.ஆர் அரசாங்கம் திறந்த பொருளாதாரத்தை முன்னெடுப்பதற்கு அதனாலான முயற்சிகளையெல்லாம் செய்தது.

நாட்டின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வாக தமிழரசுக்கட்சி 1949ம் ஆண்டில் சமஷ்டி ஆட்சி முறையை முன் வைத்த நாளிலிருந்து இலங்கையின் பேரினவாதக் கட்சிகள், சமஷ்டி முறையானது நாட்டைப் பிரிப்பது என்று மக்களுக்கப் பிராசரப்படுத்தி தனியாட்சியையே வலியுறுத்தி வந்தனர்.

1983ல் இருந்து முனைப்புப் பெற்ற ஆயுதப் போராட்டம், அதற்கெதிரான அரச பயங்கரவாதம் எல்லாம் நாட்டின் சகல துறைகளையும் பெரிதும் பாதித்தன. ஜனநாயக அமைப்புகள் செயலிழந்தன. பயங்கரவாதத்தடைச்சட்டம், அவசரகாலசட்ட அமுலாக்கல், விசாரணையில்லாத சிறைவாசம், சித்திரவதைகள் இன்னும் இது போன்ற பல நடவடிக்கைகள் மக்களின் சகல உரிமைகளையும் பறித்தெடுத்தன. ஆள் கடத்தல், அரசியல் படுகொலைகள் ஆகியவை நாளாந்த நிகழ்ச்சிகளாகின. வடக்கு கிழக்கில் தொடர்ந்த முடிவற்ற போர் பேரழிவுகளையும் அகதிகளையும் உருவாக்கியது. இந்தப் போர் நாட்டின் வளங்களைப் பெரிதும் பாதித்ததுடன் அரசங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் நிரப்ப முடியாத பற்றாக் குறையை நிரந்தரமாக ஏற்படுத்தியது. தீர்க்கப்படாத இனப்பிரச்சனையினால் உருவாகிய இந்த நிலமைகள் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணாது நாடு பொருளாதார ரீதியாக முன்னேறுவது சிரமம் என்பதையும் தெளிவாக்கியது. இந்த நிலமைகளிலேயே ஜே.ஆர் அரசாங்கம் இனப்பிரச்சனைக்கான தீர்வாக மாகாணசபைகளைக் கண்டு பிடித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்டார நாயக்கா செலவநாயகம் ஒப்பந்தத்தில் முன் வைக்கப்பட்ட பிரதேசசபைகளை எதிர்த்த ஜே.ஆர் பிற்காலத்தில் எந்தவித அதிகாரங்களுமற்ற மாவட்டசபைகளையும் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக வைத்தார். இந்த மாவட்டசபைகள் பிறந் வீட்டினிலேயே, மத்தியு, காமினி திசநாயக்கா ஆகியியோரின் உதவியுடன் யாழ்நூலக எரிப்புடன் அகால மரணம் எய்தியது! ஆனால் தொடர்ந்து வந்த நிகழ்வுகள் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு, குறைந்த பட்சம் பிரதேசவாரியான அதிகாரப் பரவலாக்கலை அமுல் நடத்துவது தான் என்பது. தேசய இனப் பிரச்சனைக்கு அரசயல் தீர்வை நோக்கி நகர்வரகள் பலராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகியது. இருந்தும் எப்படி இதை அமுல் நடத்துவதென்பது சிக்கல்கள் நிறைந்ததாகவே இருந்து வருகின்றது.

திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும் அதிகாரப் பரவலாக்கலுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக பொருளாதாரப் "பண்டிதர்கள்" கூறிக் கொண்டார்கள். திறந்த பொருளாதாரம் சுதந்திரமான சந்தையில் தங்கியிருப்பது என்றும் அது தனியார் துறைகளை ஊக்குவிப்பதுடன் பொருளாதாரத்தின் மீது அரசிற்கிருக்கும் கட்டுப்பாட்டை தளர்த்தும் எனவும் கூறினார்கள். இவ்வாறான சுதந்திரமான பொருளாதார அபிவிருத்தியானது நாட்டில் பிரதேச ரீதியான அதிகாரப் பரவலாக்கலுக்கும் வழிவகுக்கும் என்றும் நம்பப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் ஜே.ஆர்.ஜயவரத்தனா முன் வைத்த திறந்த பொருளாதாரக் கொள்கையானது அரசின் கட்டுப்பாடற்ற சுதந்தரமான பொருளாதார அபிவிருத்திகளை நாடெங்கிலும் உருவாக்குவதுடன் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய அதிகரப் பரவலாக்கலுக்கும் –பரவலாக்ககப்படும் பொருளாதார அலகுகளும், பரவலாக்கப்படும் அதிகார அலகுகளும்– உதவும் என்றும் நம்பப்பட்டது. ஆனால் யதார்த்தமான அனுபவங்கள் இதற்கு எதிர்மாறாகவே அமைந்தன.

திறந்த பொருளாதாரத்தை அமுல் நடத்தப் பதவிக்கு வந்த ஜே.ஆர் தனது ஆட்சியன் ஆரம்பத்திலேயே பாரளுமன்றத்தின் அதிகாரங்களைப் பறித்ததுடன் சகல வல்லமை பொருந்திய ஜனாதிபதியைக் கொண்ட ஆட்சி முறையை உருவாக்கினார். இதன் மூலம் நாட்டின் அரசியல், பொருளாதாரம் சம்பந்தமான அதிகாரங்கள் யாவும் தனி தனி ஒரு மனிதனின் கைகளுக்குள் அடங்கியது.

இந்த தனிமனித சர்வதிகாரம் கூட இனப் பிச்சனையைத் தீர்க்க உதவும் என்ற எண்ணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூட இந்த நடவடிக்கைகளுக்கு மறைமுக ஆதரவு வழங்கினார்கள். பாரளுமன்றத்தில் பெரும்பான்மையான சிங்கள அங்கத்தவர்களின் ஆதரவில்லாமல் இனப் பிரச்சனைகு தீர்வு காணமுடியாமல் ஜே.ஆர் கஷ்டப்படுவதாகவும், அவர் சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியாக ஆவதன் மூலம் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண முயலுவார் எனக் கூட்டணியினர் நம்பினார்கள். ஜே.ஆர் சகல அதிகாரங்களையும் கைப்பற்றிய போது மௌனமாக இருந்தது மட்டுமல்ல, ஜனாதிபதித் தேர்தலிலும் "பகிஷ்கரிப்பு" என்ற நாடகமாடி அவரை வெல்லச் செய்தார்கள்!

தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வாக இது வரை முன் வைக்கப்பட்ட தீர்வுகளில் ஜே.ஆர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுப்பாதாகக் கூறப்பட்டது. ஆனால் இந்த மாகணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்காக அரசில் யாப்பில் செய்யப்பட் 13வது திருத்தச் சட்டம் பூரணமான அதிகாரப் பரவலாக்கலை அளிக்கவில்லை என்பது மட்டுமல்ல அதனால் அளிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பரவலக்கலகளும் நடைமுறைப்படுத்தபடவில்லை என்பதுதான் உண்மையாகும்.

முதலாவது மாகாணசபைத் தேர்தல்கள் இந்திய இராணுவம் நிலை கொண்டுள்ள சமயத்தில் புலிகளினதும், ஜே.வி.பியினதும் வன் செயலகள் ஒரு புறமும், அரச பயங்கரவாதம் மறுபுறமும் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இடம் பெற்றது. மேலும் தெற்கில் பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்தத் தேர்தலில் பங்கு கொள்ளவில்லை. முதலாவது மாகாணசபைத் தேர்தலில் வடக்கு கிழக்கு மகாணம் தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களிலும் அரசாங்கக் கட்சியே பதவிக்கு வந்ததால் இந்த மாகாண சபைகளின் அதிகாரப் பகிர்வுக்கான முரண்பாடுகள் எதுவும் வெளியிலே தெரியவில்லை. மறுபுறத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கும், மத்திய அரசுக்குமிடையிலான அதிகாரங்ள் சம்பந்தமான பிரச்சனைகள் அந்த மாகாண சபையை ஜனாதிபதி கலைப்பதிலேயே முடிவுற்றது!

இரண்டாவது மாகாணசபைத் தேர்தலில் பிரதான எதிர்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சி பங்குபற்றிய அதே வேளையில், எந்த மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மாகாணசபைகள் உருவாக்கப் பட்டனவோ அந்த மக்கள் செறிவாக வாழும் பகுதியின் – வடக்கு கிழக்கு– மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடைபெறவில்லை. இரண்டாவது தேர்தல் முடிவுகளின்படி மூன்று மாகாணசபைகளின் அதிகாரம் எதிர்க் கட்சிகளின் கைகளில் வந்திருப்பதினால் மாகாணசபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல், இன்று தெற்கிலும் எதிர்க் கட்சிகளின் பிரச்சனையாக உருவாகியுள்ளது.

மாகாணசபைகளுக்குப் பரவாலாக்கும் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படுவதற்கு அரசு கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கைகளே காரணமாக இருப்பதைக் காணக் கூடியதாக் உள்ளது. தனியார் துறைகளை வளம் படுத்தவும் வெளிநாட்டு மூலதனங்களை ஊக்குவிக்கவும மத்திய அரசாங்கம் சகல பொருளாதாரத் துறைகளையும் தனது கைகளில் வைத்துக் கொண்டது. சக்தி வாய்ந் நிதி அமைச்சு, திட்டமிடல் அமைச்சு ஆகியவை, பெரிதும் மையப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் மத்திய அரசில் இயங்கின. மேலும் இவை ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளன. தாராளமய, திறந்த பொருளாதாரத்தை அமுல் நடத்த பொருளாதார வளர்ச்சி சம்பந்தமான அதிகாரஙகள் யாவும் மத்தியில் குவிக்கப்பட வேண்டும் என்பதே அரசின் கொள்கையாக உள்ளது. இந்த அடிப்படையிலேயே 13வது திருத்தச் சட்டமும் செய்யப்பட்டது. மத்திய மாகாணத்திலுள்ள பெரும் தோட்டங்கள், மேற்கு மாகாணத்திலுள்ள ஏற்றுமதிக்கான தொழில்கள், மற்றைய மாகாணங்களில் உள்ள தொழில் அபிவிருத்திகள் சம்பந்தமான விடயங்கள் யாவும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளன. மாகாணசபைகளின் நிதிகளும் மத்திய அரசினால் கட்டுப்படுத்தப் படுகின்றன. மாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் கமிஷனில் மாகாணசபைகளின் பிரதிநிதிகள் எவரும் கிடையாது. இந்தக் கமிஷன் பூரணமாக மத்தியின் கட்டுப்பாட்டிலுள்ள அமைப்பாகும். மாகாணசபைகளுக்குத் தற்போது வரிகள் அறவிட இருக்கும் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், அவை தமக்குத் தேவையான நிதி மூலதனத்தை வரிகளின் மூலம் சேகரிக்க முடியாதவையாகவும் இருக்கின்றன. இதனால் மாகாண சபைகள் தமது நிதித் தேவைகளுக்கு மத்திய அரசாங்கத்திடம் கையேந்தும் நிலமையே உள்ளது.

இதில் முக்கியமானது வெளிநாட்டு உதவிகள் சம்பந்தமானது. பெருமளவில் வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருக்கும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் இது முக்கியமான பங்கை வகிக்கின்றது. 13வது திருத்தச் சட்டம் வெளிநாட்டு உதவிகள் சம்பந்தமான சகல அதிகாரங்களையும் மத்திய அரசிடமே ஒப்படைத்துள்ளது. உதவி அளிக்கும் நாடுகளும் இந்த மையப்படுத்தப்பட்ட அமைப்பையே விரும்புவது போலவும் தெரிகின்றது. இதனால் முக்கியமான பொருளாதார அபிவிருத்தி பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் மேலும் மேலும் பிரதேச/மாகாண அமைப்புக்களின் கைகளில் இருந்து எடுக்கப்பட்டு மத்தியில் இருக்கும் அமைச்சர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்த அதிகாரம் அமைச்சர்களின் கைகளில் இருக்கின்றது என்று சொல்வதிலும் பார்க்க சர்வதேச நிதிநிறுவணங்களின் கைகளில் இருக்கின்றது என்று சொல்வதே சரியாகும். அதிகாரப் பரவலாக்கப்பட்ட சில விடயங்களும் வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருந்தால், அவற்றிற்கும் இந்தக் கதியே ஏற்படும். உதாராணமாக வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருக்கும் கிராம அபிவிருத்தித் திட்டங்கள் கூட ஜனாதிபதியின் கைகளிலேயே இருக்கின்றன. வெளிநாட்டு ஒப்பந்தங்கள் செய்யும் மத்திய அமைச்சு 13 வது திருத்தச் சட்டம் கொடுக்கும் அதிகாரங்களைப் பறித்தெடுத்துவிடும்.

மேற் கூறிய யாவும் தாரளமய – திறந்த பொருளாதாரக் கொள்கைகளை அமுல் நடத்துவதற்கும் தேசிய இனப் பிரச்சனையை பிரதேச அல்லது மாகாண ரீதியான அதிகாரப பரவலாக்கல் மூலமாகத் தீர்ப்பதில் உள்ள யதார்த்தமான முரண்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றன. திறந்த பொருளாதரக் கொள்கை "பண்டிதர்"கள் கூறியபடி, இது அதிகாரத்தைப் பரவலாக்காமல் மையப்படுத்தவே உதவியுள்ளது என்பதுதான் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த திறந்த பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ள அரசாங்கம், தேசிய இனங்களின் பிரச்சனைகளை அதிகாரப் பரவலாக்கல் மூலமாகத் தீர்க்கப் போவதாகக் கூறுவது வெறும் பம்மாத்தாகும். தேசிய இனங்களின் பிரச்சனைகளை அதிகாரப் பரவலாக்கல் மூலமாகத் தீர்க்க வேண்டுமானால், அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையையும் மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

✳ வசந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாளை ஒரு புது விடியல்

இருள் வானம் மெலிதாக அழியத் தொடங்கியது. வெளிறிய பொழுதாய் விடியல் ஜனனம் பெற்று என்னை இயந்திரமாகியது. 'எஸ்பான்'[1] இல் ஏறி, பஸ்ஸில் இடறி ஒருவாறு வேலை இடத்தை அடைந்தேன்.
செவ்பின்[2] முகம் மலர்வாய் இருந்ததாள்.
எனக்கு, ஆச்சரியம்.
இருக்காதா?
ஒவ்வொரு நாளும் சிணுங்கி மூஞ்சியாய் இருப்பாள்.
இன்றைக்கு இப்படி புன்முறுவல் தழுவ அதை, ஏந்திய பொலிவுடன் நடமாடினால் எப்படி ஆச்சரியப்படாமல் இருப்பது?

'செவ்[3] என்ற சொல்லுக்கு கரடு முரடாய் முறைத்து செயற்கையாய் சிரித்து, பின்னும் முன்னும் வாலை முறுக்கி பலிளித்து...... அர்த்தங்கள் கோடியாய்.....
என்றைக்கும் என்னை, ஒருசக பெண்ணாக தன்னைப் போல் ஒரு மனித ஜீவனாகக் கருதாத இவளா இன்றைக்கு!

'பிறாவ்லையன் மயூரி குட் மோர்கன்.... வீ கேற்எஸ்ற்....டீயர்?'
( செல்வி மயூரி, காலை வணக்கம்..... எப்படிச் சுகம்? )
பதிலுக்கு மோர்கனுடன், குட் டங்கே[4]யும் சேர்த்து அவளை அண்மித்தேன்.
'மயூரி... இன்றைக்கு ருஷ்யக்காரி கிராங்[5].. நீயும், இன்னும் வழமையாக வேலை செய்யும் நண்பிகளும்தாம் எல்லாவற்றையும் ஒப்பேற்ற வேண்டும்'
நளினமிக்கதொரு அசைவுடன் கூறிக்கொண்டாள்.

துலைஞ்சுது போ.. வழமையாக இருபத்திமுன்று அறைகள் கிறாங்கில் நிற்பவளின் அறைகளில் ஆறைச் சேர்த்தால்... இருபத்தியொன்பது. அங்கால...ரொயிலட், பாத் இப்படியே போனால் நாரி முறிஞ்சு... கிறங்கன் கவுசு[6]க்குத்தாம்...

வீட்டில் ஒரு வாலி தண்ணியள்ள விடமாட்டா அம்மா. இஞ்ச வந்து, 'ஜெர்மனில் மாப்பிள்ளைக்கு... மனைவியாகவ இரு' என்ற அப்பாவின் உறுமலுக்கு அம்மாவும் இசைந்து...எல்லாம் பாழாய்ப்போய்...குட்டிச் சுவராகி, அறுந்துப்போட்டு..... தனிமையில் வாடி...

ஒவ்வொரு அறையாக ஏறியிறங்கி...துடைச்சுக் கூட்டிப் பெருக்கி கழுவி , மெத்தை விரிச்சு....நினைக்கவே அழுகை வரும் போல கிடக்கு.
மூஞ்சூறுக் குட்டியள்போல தின்னுட்டத் திமிரெடுத்து, தங்கட பெட்டையளோட கூத்தாடும் கோட்டல் விருந்தாளிகள் போடும் கும்மாளத்தையும், கூடப் பார்க்க வேணும். பத்தாதற்கு, அவங்கட சேட்டையள் உணற்சியைப் புட்டு உயிரை மாய்ப்பதுதாம்.

'சாப்பாடு இப்படி ஆறிக்கொண்டிருக்க என்ன மயூரி யோசிக்கிராய்?
'ஒண்டுமில்லை, பிறாவ் மிலோவிஸ்கி'
உனக்கு, ஏதாவது பெரிய பிரச்சினை இருக்கும் போல கிடக்கு, என்னால் உதவியள் ஏதல்?....
இல்லை
பிறகு?
வேலை வர வரக்கூடிக் கொண்டு போகுது, ரூம்களில இருக்கிற கெஸ்ற்கள் ரொம்பவும் மோசம்" ஓ... அதுதானா? பேசாமல் இணங்கி விடு. ஆயிரம் ஆயிரமாய் குவியும். ஐந்து நட்சத்திரக் கோட்டல்களுக்கு வாறவங்கள் பெரிய பெரிய பதவிகளில இருக்கிறவங்கள். அவங்களுக்குச் சுகம் வேணும் எங்களுக்குப் பணம் வேணும்.

நேற்று இப்படிக் கூறிய ருஷ்யக்காரிதாம் இண்டைக்கு, கிறாங்கில நிற்கிறாள். அவளைப் புரிஞ்சு கொள்ளவே முடியாமலிருக்கு நாற்பதுக்கும், ஐம்பதுக்கும் நடுவில நிற்பாள். ஆனால், தோற்றம் அறுபதை ஒத்திருக்கும். இருபத்தியெட்டு வயது இளந்தாரி ஜெர்மன்காரனை மறுமணம் செய்துகொண்டு, ஊரூராய்ச் சுத்துகிறாள்.

'என்ன மயூரி ? எப்படியுள்ளீர்? நேற்று, எங்க உம்மைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணயில்லை? ' கேட்டுக் கொண்டே என்னைஅண்மித்தான் சிவா.

'டேய், ஏதாவது என்னோட கதைக்காம இருக்கமாட்டாயா? அவன் மீது பாய்நதேன்

'இல்லை மயூரி.... உம்மோட கதைக்க... சண்டை பிடிக்க ஆசையாய் இருக்கு.'

'டேய், சிவா இதுதான்ரா சொல்லுறது....எங்கடயள் வேலை செய்யிற இடங்களில வேலை செய்யப்படாதென்று.'

நல்லா அழகு தமிழில பேசிறீர். இல்லை பேசும். வேற?....

'..........................................'

விசயம் தெரியுமோ?.

'என்னடா?

'அது சரி கொஞ்சம் தெரிஞ்சவனென்ட படியால்தான் பொறுக்கிறன். இல்லாட்டி கதை வேற. எந்த நேரமும் டேய் ...டேய். இதைக்குறைச்சால் கெட்டா போவாய்?.

'விசயத்திற்குவாடா பேசாம், சிவாவைக் கேட்டு கொண்டேன்.

அவன் தான் கடைசி காலத்திற்கு எனக்கு துணைக்கு வருவான் போல் பட்டது. இப்படி ,அவன் மீது ஒரு நப்பாசை நீண்டு கொண்டு போகுது.

என்ன செய்யிறது? எவ்வளவு காலத்துக்குத்தானாம் உணர்வுகளுடன் போராடுவது. குளிர் தண்ணீர் தலைச் சூடு குறைக்கிறது.... இத்தியாதி விசயங்கள் எனக்குச் சரிப்பட்டு வராது. நாற்பது ஐம்பதுக்குப் போனவர்கள் சொல்வார்கள், செய்வார்கள். எனக்கு முப்பது. நான்,எவ்வளவோ கனவுகளுடன் ஊசலாடுகிறேன்.

பேசி...பிளேன் ஏறி....குளிர்குடித்து... ஆறுமாதம்வரை வாழ்ந்து.... 'இனிமேலும் வேண்டாம் , எனறு மனஞ்சொல்லும்

அவ்வளவு கஸ்டப்பட்டு.....

☆ ☆ ☆

'என்னடி புத்தகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்.

'அப்ப என்ன தான் செய்யச் சொல்லுறியள்?,

'பேசாதே. வாய் இருக்கெண்டு கண்ட மாதிரிக் கதைக்காம இப்படி என்னையே பார்த்துக் கொண்டிரு புத்தகத்தை குப்பை வாளியில போட வைக்காதையடி,.

'உங்களையே பார்த்துக் கொண்டிருந்தது தானே மிச்சம். இவ்வளவு நாளாய் இதைத்தானே கண்டனான். வேற என்னத்தைக் கண்டன்? அடி, குத்து, உதை அதோட வேசை. உங்கட குடி, போதை மருந்து.... இது தானே என்ர வாழ்க்கையின்ர அதி உன்னதமான பகுதியாக இருக்கு.

'மூடடி வாயை, மூதேவிக் கழுதை, செருப்பு,.'ஓ, வடிவாய் ஏசுங்கோ. சம்பந்தம் பேசவந்த புரோக்கர் உங்களை, பேராதனையில லெக்சரர் எண்டு சொல்லித்தான் எங்கட அப்பாவை மசிய வைச்சவர். இப்ப இஞ்ச வந்தாப் பிறகுதான் நீங்கள் கம்பஸ்சா அல்லது கக்கூசா எண்டு தெரியுது.

பாழாய்போன என்ர அப்பன் நாலு பிள்ளையளுக்கு பாடஞ்சொல்லிக் கொண்டிருந்த என்னை ஆத்தில தள்ளிப் போட்டான்,



☆ ☆ ☆



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரஸ்சியாவில் சாப்பாடு இல்லை போல கிடக்கு. சிவா தமிழில சொன்னான்.
கிழவியின் காதில் பட்டு, என்னவாம் ரஸ்சியாக்கு, என்றிழுத்தாள். எனக்கு அந்தரமாய் போச்சு.
'ரஸ்சியாவில் அரசியல் நிலமை எப்படி என்று கேட்கிறார்,. என்றேன்
சிவாவுக்கு அப்படித்தான் என்பது போல் பாவனை செய்தான்.
'என்ன படித்தாய்? உலக விடயங்கில் ஆர்வமாய் இருக்க,?

'பி.ஏ. கொனஸ்,.
விளங்காதவளாய் முழித்தாள். இப்படியொரு கட்டுப்பெட்டியா. மனதுக்குள் அலுத்து வெளியில் காட்டிக்காமல் விளங்கப்படுத்தினேன். இங்கிலாந்து கல்வி முறை என்றவுடன் முகஞ்சுழித்தாள்.
நீங்கள் என்ன படித்தீர்கள் மிலோவிஸ்கி? ஒரு வித கர்வத்துடன் கேட்டேன். என் பட்டப்படிப்பு அதை எனக்கு இயல்பாக்கியது.
சிவாவின் பக்கம் முகத்தைச் சுழித்து 'நீ என்னமாதிரி, என்று கண்களினால் கேட்டாள்.
'கணக்கியல் படித்தேன் ஒப்பேற்றவில்லை, அழகிய ஆங்கிலத்தில் பல்லிளித்து பதிலுரைத்தான்.
எங்கள் சம்பாசணைகளை செவிமடுத்துக் கொண்டிருந்த எங்கள் செவ்ப்பின் ருஸ்சியாக்காரியைப் பார்த்து 'ஏன் மிலோவிஸ்கி பொய் பேசுகிறாய்? கொச்சை ஆங்கிலத்தில் துப்பிக்கொண்டாள்.
மிலோவிஸ்கி மௌனமாகிப் போயிருந்தாள்.
'இவள் ஒரு படித்த லூசு. ருஸ்யாவில் பேராசிரியர் தொழில் பார்த்தாள். வரலாற்றுத்துறையில் கலாநிதிப் பட்டதாரி. ருஷ்ய ஆட்சிக்காரர்களின் சர்வாதிகாரத்தால் புருஷனையும், பிள்ளையையும் பறிகொடுத்ததில் போய் இவளது அரசியல்முடிந்தது. இந்தச் சம்பவங்களால் ருஷ்யாவை விட்டு இஞ்ச வந்துள்ளாள்.
டொச்சில் நளினமாகச் சொல்லி, தன் நாட்டின் அமைதியை, கர்வமாக்கினாள். எனக்கு, செவ்பிணின் பாஷை விளங்கவில்லை.
சிவா, அழகாய் மூன்று மொழிகள் பேசும் வல்லமை பொருந்தியவன். செவ்வினை மொழி பெயர்த்தான். கூடவே, வாயையும் பிளந்து கொண்டான்.
ஆச்சரியம்.
இவளென்ன சுத்த பட்டிக்காடு போல திரியிறாள்... வேலையோ சிம்மர் மேட்சின். ரூம் துடைத்து...... கக்கூசு கழுவி...இப்படிப் போகுதே எங்கட வாழ்கை.....!

மதிய இடைவேலையின்போது கல்விச் சான்றிதழைக் காட்டினாள்.
'ஏன் இப்படிக் கழுவித் துடைத்து, வார்த்தை முடிக்கவில்லை.
'நீ, இந்த வாழ்க்கையை கௌரவக் கண்ணோட்டத்தில் பார்க்கிறாய்... எங்களிடம்...அப்படியொன்றுமில்லை நாங்கள், மனிதர்கள். உயிர் வாழ எது தேவையோ, அதைச் செய்கிறோம். 'சிரித்துக் கொண்டே சொன்னாள்.
'உனக்கென்ன நடந்தது?.
'நான், கேட்கவேண்டிய கேள்வி,.
'அப்போ?,
'இருவரும் வெவ்வேறு சூழலில் வளர்ந்தவர்கள். மனிதர்கள், அதிகமாய் சூழலைப் பிரதிபலிப்பவர்கள்,.
'ஒன்றும், புரியவில்லை.
'புரியாமலிருப்பதே , உங்கள் சூழலின் புத்திசாலித்தனம்,.
'குழப்புறாய் மிலோவிஸ்கி,.
'கொம்முனிசம் தெரியுமா?.
'ஓம், மனுசரை பூட்டி வைக்கிற தத்துவம், திறமையை முடக்கிற செயல் வடிவம்,.
'உண்மைதான். உன் தேசத்தின் குரல் இப்படித்தாம் இருக்கும்.
'என்ன நீ..சம்பந்தமில்லாமல் பேசுகிறாய்?.
உன் படிப்புக்கு வேறெப்படிப் பேசிறது?,
முகஞ்சுழித்துக் குமுறினாள்.
'ருஷ்யாவில மனுசரை..பூட்டி வைப்பது..இப்ப யெல்சின்.. வார்த்தையைச் சேர்த்து பேசி முடிப்பதற்குள்
'உனக்கு வயதென்ன?
'முப்பது,.
'எழுபத்தியஞ்சு வருசங்களுக்கு முன்னாள் வாழ்ந்த லெனினைத் தெரியுமா?.
கொஞ்சம் தெரியும் புரட்சிக்காரன்,.
கிளுகென்று சிரித்தாள்.
'அவனோடு, கம்யூனிசம் செத்துப்போனது ருஷ்யாவில். உங்கட தேசங்களில அகதியாய் அலையுது, என்றுவிட்டு என் முதுகில் தட்டினாள்.
நான், எதுவும் பேசவில்லை.
இறுதியில், லெனின் ஒரு சிறந்த மனிதர் என்றாள். கூடவே, எங்களை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. நாங்கள் மீண்டுமொரு லெனின் பிறப்பை எதிர்பார்க்கிறோம் என்றாள்.
அவளை புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவள் போக்கே விசரப் போக்கு மாதிரி.

நாலுமணிக்கு முடியவேண்டிய வேலை, இண்டைக்கு ஐஞ்சு மணிக்குத்தாம் முடிஞ்சுது.
சிவா, வேலை முடிஞ்ச 'கஸ்',சொல்லிப் போய்விட்டான்.
நான், ருஸ்சியாக்காரியை சபித்துக் கொண்டேன். இவள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறாங்கில நிண்டு கும்மாளமடிக்க 'நான்,கஸ்டப்படுவதுடன். தனிமையுடன் போராடுகிறன். செவ்வினிக்கு 'கஸ், சொல்லி வீடு மீண்டேன்.

வசந்தி வாடி வதங்கிப் போயிருந்தாள். 'என்னடி நடந்தது? 'ஞானம் ஏமாத்திப் போட்டானடி, கண்ணீர்மல்க கசிந்து உருகினாள்.

'மயூரி அக்கா, எங்கட காதல் தாம் உண்மையானது. இது எதற்கும் அஞ்சாதது மனிதர்கள் புரிந்து கொள்ள மனிதக்க் காதலில்லை', என்று படவசனம் பேசினவன் இப்படி, அம்போவெண்டு எப்படி ஏமாத்தினவனடி?'



எல்லாம்என்ர நடவடிக்கை தானாம் ஜெகோவாவோட நான் உறவு கொண்டதும், ஜெகோவாவின் சாட்சியாகி மற்ற சாட்சிகளுடன் போவது பிடிக்கேல்லையாம்.'

'அதுக்கும் காதலுக்கும் ? ஆச்சரியத்துடன் வசந்தியை உற்று நோக்கியபடி கேட்டேன்.

'ஞானம், தான் இந்துவாக வாழ்ந்து இந்துவாகத் தான் சாவானாம். அஞ்சு,பத்துக்காக பொறுக்கித்தனமாக மதம் மாறி தன்ர சுயத்தை அழிக்கமாட்டானாம். என்னை, ஜெகோவாவிலிருந்து விலத்தி தன்னுடன் வாழ வரட்டாம். இல்லையேல் ஊரெல்லாம் செவல்லித்திரிவானாம்'. விக்கி விக்கி அழுது, மூக்குச்சீறி சட்டையில் துடைத்து... தலைமுடியை கொண்டை போட்டுக் கூறி முடித்தாள்.

எனக்கு, அந்தரமாய் போச்சு. மதம் பிடிக்காமல் மனிதராய் வாழும்படி கூறிவிடலாம், யோசித்தேன். வசந்தி கட்டிலில் புரண்டாள்.

என் வாழ்கையை ஞானம் நாசமாக்கிப் போட்டான். எல்லாருக்கும், தானும் நானும் கணவன் மனைவியாய் வாழ்ந்து வந்தது எண்டு சொல்லித் திரியிரானடி. தலையணையில் முகம் புதைத்துச் சொன்னாள்.

வசந்தி என்ர ரூம்மேட். அவளை, எனக்கு நல்லாவே தெரியும். ஞானம் தன்ர சுயனலத்திற்காக பறைசாத்துகிறான். மதம் காதலுக்கிடைஞ்சல் எண்டால் நண்பர்களாகிப் பிரிஞ்சிருக்கலாம், அல்லது மதத்தை விட்டுத் துலைக்கலாம், ஏன் இப்படிமல்லுக் கட்டுதுகள்...ஓரே குழப்மாய் இருந்தது.

நேரமும் இரவு ஒன்பது மணியாகிவிட்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிவாவைப் போய் பார்த்து, ஞானத்துடன் கதைக்கும்படி சொல்லலாமெனத் தோன்ற அவன் ரூம் சென்று கதவைத் தட்டினேன்.
'வெயர் இஸ் தா?'என்றபடி தலையைச் சொறிந்து, கதவைத் திறந்தான்.
நான்,அவனை உ'ரசியபடி உள்ளே செல்ல முயன்றேன்.
'ஐயோ மயூரி உள்ளே போகாதே. நான்,நித்திரை கொள்ளப் போறன் 'எட்டி என் கையைப்பிடித்து இழுத்து மறித்தான்.
நான்,அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு உள்ளே நுழைந்தேன். உள்ளே அவன் கட்டிலில் உடலில' ஆடையெதுவுமின'றி வெள்ளைக்காரிகிடந்தாள். என்னைக் கண்டதும் போர்வயால் தன்னுடலை மறைத்து' 'குட்டன்ஆபண்ட்' என்றாள். நான் முறைத்து விட்டு திரும்பினேன். சிவா எதிரில் தலை குனிந்து ஒதுங்கினான்.
'நீயுமொரு மனுசனா?' என்றேன்.
"மயூரி நான் மனுசனாக இருக்கத்தான்....அதுவும் உங்களைப் போன்றவர்களிடம் மனுசனாக நடக்கத்தான் இப்படி....இந்த மாதிரி இல்லாவிட்டால் இவளுக்குப் பதில் நீதான் .........' வார்த்தையை விழுங்கியபடி மௌனமானான்.
அவளுக்குப் பதில் நானென்றால் நான் மகிழ்ச்சயடைவேன். ஆனால் என் கனவை சிவா நாசமாக்கிப்போட்டான்.
கட்டிலில் குப்புற விழுந்து குமுறிக் குமுறி அழுதேன். வசந்தியும் அழுதபடி மௌனமாய் என்னைப் பார்த்தாள்.
நானும் அவளைப் பார்த்தேன்.
"எனக்காக அழ, கவலைப்பட நீயொருத்தி தானடி இருக்கிறாய். ஏன் அழுகிறாய்? விட்டுத்தள்ளடி. நான் பேசாமல் ஜெகாவோவுடன் என்னை ஒப்புக் கொடுப்பேன். யார் என்ன வேணுமெண்டாலும் பேசட்டும், என்று கூறிவிட்டு திரும்பிப் படுத்துக் கொண்டாள்.
நான். நாளைக்கு வேலைக்குப் போவதில்லை என்ற முடிவுடன் அழுது கொண்டேன். சிவா ஏமாற்றுக்காரன் போல என் மனதில் பதிந்து கொண்டான். நான் அவனைக் காதலித்தேன். அவன் என்னை எப்பிடிப் பார்த்தானோ தெரியாது!
மிலோவிசுக்கி வேலைக்கு வருவாள். கோட்டல் கெஸ்ற்றுக்கள் சேட்டை விடுவாங்கள். எங்களின்ரைகளின்ரை சேட்டைகளையும் பொறுக்கலாம். நாங்கள் இணங்கிவிட்டால் காசும் வரும் சுகமும் வரும்.. முடிந்தால் எங்களின்ரைகளிட்டையும் காசு வேண்டலாம். வசந்தி துக்கம் வராமல் தவித்தாள்.
கட்டிலைவிட்டு எழும்பியவளுக்கு ஜெகோவாவின் நீங்களும் பரதீசில் வாழலாம்" என்ற நூல் அடைக்கலம் கொடுக்க "நான்" போர்வைக்குள் முடங்கினேன். நாளை ஒரு புதிய விடியல் என்ற நம்பிக்கையுடன்.
(முற்றும்)

✳ ப.வி.சிறிரங்கன்

1. விரைவான ரயில் வண்டி.
2. முதலாளிப் பெண்
3. முதலாளி
4. நன்றி
5. சுகமீனம்
6. வைத்தியசாலை

# 17 வது இலக்கியச்சந்திப்பு

## காலம்

30 – 31.10.1993

## இடம்

**Wilhadi Gemeinde**

**Steffensweg 89**

**28217 BREMEN**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

( பின் அட்டைத் தொடர்ச்சி)

No:19, University road, Boralasgamuwa ( அவர் இறக்கும் வரை வாழ்ந்த இல்லத்தின் விலாசத்துடன்) என்ற அச்சக முத்திரையுடன் வெளிவந்து கொண்டுதான் இருந்தன. அவற்றின் பின் துணிச்சலான தோழர் T.N. செயலாற்றிக் கொண்டிருந்தார்.

தமது இளமைப் பிராயத்தில், 1940களில் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்த தோழர் T.N.பெரேரா, கட்சியினதும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் தன்னனைப் பூரணமாக இணைத்துக் கொண்டார்

1953ம் ஆண்டு பதவிக்கு வந்த டட்லி சேனநாயக்காவைப்பிரதமராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், அரிசியின் விலையைக் கூட்டிய பொழுது, நாடெங்கும் பெரும் எதிர்ப்பு உருவாகியது. இந்த எதிர்ப்பைக் காட்டுவதற்காக இடதுசாரிக் கட்சிகள் 1953 ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் வேலைநிறுத்தத்தையும் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் அழைப்பு விடுத்தனர். இதுவே இலங்கையின் வரலாற்றில் வர்க்க ரீதியாக ஏற்பட்ட மாபெரும் மக்கள் எழுச்சியாகும். ஒரு நாள் "ஹர்த்தால்" ஒரு வாரப் போராட்ட நடவடிக்கைகளாக நீண்டது. ( இது பிற்காலத்தில் "ஹர்த்தால்" என்ற சொல்லையே கொச்சப்படுத்தும் வகையில் சில கட்சிகளும் இயக்கங்களும் பலவந்தமாக முதலாளிகளைக் கொண்டு கடைகளைப் பூட்டுவித்த போலிக் "ஹர்த்தால்கள் போன்றதல்ல.) தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். மக்கள் தெருக்களுக்கு வந்து வீதிகளை அடைத்து, புகையிரதங்களை நிறுத்தி அரசின் நடவடிக்கைகளை ஸ்தம்பிதமடையச் செய்தனர். அரசாங்கத்தின் மந்திரிசபை கிலி கொண்டு கொழும்புத் துறைமுகத்திலுள்ள பிரித்தானியக் கப்பலொன்றில் கூடினர்! இந்தப் போராட்டத்தை பொறலஸ்கமுவப் பகுதியில் முன் நின்று நடத்தியவர்களில் தோழர் T.N.பெரேராவும் ஒருவர். இதன் காரணமாக போலிசாரின் வலையில் சிக்காது அவர் ஒளிந்து திரிந்த நாட்கள் பல.

இலங்கை வர்த்தகஊழியர் சங்கத்தின் அங்கத்தவராக இருந்த தோழர்T.N அத்தொழிற்சங்கத்தின் சகல நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். அச்சங்கத்தின் தலைமைப் பீடத்தில் பல வருடங்கள் அங்கம் வகித்தார்.

தனது கிராமமான பொறலஸ்கமுவவில் கிராமசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தோழர் T.N.பெரேரா அதன் அங்கத்ததவராகவும், தலைவராகவும் பதினேழு ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றினார்.

1964ம் ஆண்டு லங்கா சமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரத் தீர்மானித்த பொழுது அவர் அக்கட்சியிலிருந்து, தோழர் எட்மண்ட் சமரக்கொடி, தோழர் பாலாதம்பு, மற்றும் தோழர்களுடன் வெளியேறினார்.

அதன் பின் புரட்சிகரமார்க்சியக்கட்சியின் தலைமைப் பீடத்தில் இறுதி வரை சேவையாற்றினார். 1985ல் ஆரம்பமாகிய CRC அமைப்பின் முலமும் தனது சேவைகளைத் தொடர்ந்தார். "வெனச" என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்த தோழர் TN, மற்றைய தமிழ், சிங்கள வெளியீடுகளை வெளிக்கொணர்வதிலும் உதவினார். சுதந்திர மாணவர் சங்கத்தைச் சேர்ந்த தயாபத்திரன ஜே.வி.பியனரினால் கொலை செய்யப்பட்ட பின்பு, ஜேவிபியினரையும் அரசையும் சாடி வெளியிடப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் சுவரொட்டி தொடர்பாக பொலிசாரினால் 1987 பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டார். இவர் மீது சோடிக்கப்பட்ட வழக்கை பொலிசார் நிரூபிக்கத் தவறியதால் விடுதலை செய்யப்பட்டார்.

இறுதி வருடங்களில், நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும், ஐரோப்பாவிற்கு நான்காவது அகிலத்தின் மகாநாட்டிற்கும், (ஜேர்மன்)ஐக்கிய சோசலிசக்கட்சி மகாநாடு, மற்றும் பல கூட்டங்களிலும் கலந்து கொண்டதுடன் இலங்கையின் இன்றைய பிரச்சனைகளுக்கான தீர்வு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதிலேயே தங்கியுள்ளது என்பதை அக் கூட்டங்களில் வலியுறுத்தினார்.

இறுதி மூச்சுவரை முற்போக்கு சிந்தனையுடன் செயலாற்றிய ஒரு நெருங்கிய நண்பனுக்கு, தோழனுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தோழர் T.N.பெரேரா

எங்கெல்லாம் நாம் சென்றாலும், எமக்கொரு தாய்த் துறைமுகமாய், ஒரு நங்கூரமாய் இருந்த தோழரை இழந்துவிட்டோம். தோழர் T.N.பெரேரா ( எம் எல்லோருக்கும் தோழர் T.N.) 25.09.1993 அன்று காலமாகிவிட்டார்.

அவரின் முழு வாழ்க்கையுமே ஒரு அரசியல் வரலாறு. கடந்த அரை நூற்றாண்டின் அரசியல் நிகழ்வுகளில் எல்லாம் அவரின் காலின் தடங்கள் பதிக்கப்பட்டுள்ளன. நமது ஒவ்வொரு அடுத்த காலடியிலும் தனது அனுபவ ஒளியைப் பாய்ச்சி அறிவுரை வழங்கிய ஒரு தோழனை நாம் இழந்து விட்டோம். நோய்வாய்ப்பட்ட நேரத்திலும் இடதுசாரி இயக்கத்திற்குத் தன்னாலான உதவிகளைச் செய்வேன் என்று தொலை பேசி மூலம் எமக்கு உறுதியளித்த தோழர் T.N சில வாரங்களிலேயே எம்மை விட்டுப் பிரிய நேர்ந்து விட்டது.

அவரின் அரசியல் வாழ்க்கைப் படகு, அன்னிய ஆங்கிலேய ஆதிக்கத்தையே குலுக்கி, தியாகி கந்தசாமியின் இரத்தத்தினால் அமரத்துவம் பெற்ற 1947 பொது வேலை நிறுத்தத்தில் ஆற்றிய பங்கிலிருந்து, தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்த இளைஞர்களுக்கு உதவுவது வரைக்கும் பிரயாணம் செய்தது. அரச படைகளின் கெடுபிடிகளும், அரசினதும் அராஜக அமைப்புக்களின் கடத்தல்களும் கொலைகளும் தலைவிரித்தாடிய சூழல்களிலும் மனித உரிமைக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் தாம் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டதையும் துச்சமெனக் கருதி தனது அரசியல் கடமைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டார். அரசிற்கெதிரான சிங்கள, தமிழ் சுவரொட்டிகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் எல்லாவற்றிலும் CRC PRESS,

( தொடர்ச்சி உள் அட்டை)



இலங்கை வர்த்தக ஊழியர் சங்க ஊர்வலத்தின் முன்னணியில் தோழர் T.N.பெரேரா (அம்புக்குறி) செல்லுகிறார்.